# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 317 | சனி, டிசம்பர் 14, 2024 | 14 பக்கங்கள்




## தேசத்தின் குரல்

## அன்ரன் பாலசிங்கம்

அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவுகளுடன்...





# டில்லி பயணமாகும் அநுர!

## மோடி சொல்லப்போகும் செய்தி என்ன?

அகிலன்

# இந்திய அரசின் எண்ணத்தில் மாற்றம் வருமா?



## காத்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள்

ஊடகவியலாளர் தமிழ்ப் பிரபாகரன்




© 2024 இலக்கு இணையம்

## அதானி குழுமம் விரைவில் கொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பிக்கவேண்டும்

### பிமல் ரத்நாயக்க



கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் அபிவிருத்தி பணிகள் இந்தியாவின் அதானி குழுமம் ஆரம்பிக்க வேண்டும் என துறைமுக விவகாரங்களுக்கான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனத்தின் மன்னார் காற்றாலைமின்திட்டம் இலங்கைக்கு சாத்தியமில்லை என்பதாலேயே அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்புதுறைமுக மேற்கு முனையம் திட்டத்திற்கான நிதி தேவைகள் எழுந்துள்ளன என குறிப்பிட்டுள்ள அவர் அந்த திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கு முன்வந்த அமெரிக்க நிறுவனத்திற்கும் அதானி குழுமத்திற்கும் இடையில் பிரச்சினை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அதானி குழுமம் ஏற்கனவே இந்த விடயத்திற்கு தீர்வை கண்டுள்ளது என தெரிவித்துள்ள அவர் தனது சொந்த நிதியிலிருந்து அதானி குழுமம் இந்த திட்டத்திற்கான நிதியை வழங்கும் என குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புதுறைமுகத்தில் மிகவிரைவில் அதானி குழுமம் தனது நடவடிக்கைளை ஆரம்பிப்பது அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர்அது இலங்கைக்கும்துறைமுக அதிகார சபைக்கும் பயனளிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலினால் அதிகளவான ஊடகவியலாளர்கள் படுகொலை - ஊடக அமைப்பு கண்டனம்

இந்த வருடம் பணியில் இருந்த 18 ஊடகவியலாளர்கள் இஸ்ரேலினால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு கடந்த வியாழக்கிழமை(12) வெளியிட்ட தனது இந்த ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உலகம் முழுவதும் கொல்லப்பட்ட 54 ஊடகவியலாளர்களுடன் ஒப்பிடும்போது இது மூன்றில் ஒரு பங்காகும். ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடாக பலஸ்தீனம் மாற்றம் பெற்றுள்ளது. கடந்த 5 வருடங்களில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு அங்கு ஊடகவியலாளர்கள் கொல்லப்



பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் போர் ஆரம்பித்ததில் இருந்து அங்கு 145 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 35 பேர் பணியில் இருக்கும் போது கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் எமது அமைப்பு அனைத்துலக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## நிபந்தனையற்ற போர் நிறுத்தம் – ஐ. நாவில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றம்

கடந்த 14 மாதங்களாக காசாவில் இடம்பெறும் போரை நிபந்தனையற்ற போர் நிறுத்தம் மூலம் முடிவுக்கு கொண்டுவரும் தீர்மானம் ஒன்று கடந்த புதன் கிழமை(11) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.



ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கு இடையிலான உடனடியான, நிரந்தர மற்றும் நிபந்தனையற்ற இந்த போர் நிறுத்தம் தொடர்பான இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 158 நாடுகள் வாக்களித்துள்ளன. 12 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன, 9 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன. கைதிகள் நிபந்தனைகளின்றி விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

இதேபோன்றதொரு தீர்மானம் கடந்த மாதம் ஐ.நாவின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பயங்கரவாத சட்டம் தொடர்பில் மறுபரிசீலனை: நீதியமைச்சர்

பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்கான பணிகளை ஆரம்பித்துவிட்டோம் என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, பாராளுமன்றத்தில் சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.



கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மாநாடொன்றின் போதே கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தகப்போரில் யாரும் வெல்ல முடியாது — சீனா

அமெரிக்காவுக்கும்- சீனாவுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தகப்போரில் யாரும் வெற்றியீட்ட முடியாது என சீன அதிபர் ஜி ஜின்பிங் கடந்த செவ்வாய்க்கிழமை(10) பீஜிங்கில் இடம்பெற்ற தொழிலதிபர்களுக்கான மாநாட்டில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் உலக வங்கி, பிறிக்ஸ் அமைப்பின் புதிய அபிவிருத்தி வங்கி, அனைத்துலக நாணய நிதியம், ஐ.நாவின் உலக



வர்த்தக நிறுவனம் ஆகிய முக்கிய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்


## கிழக்கு மாகாணம்– கல்வித்துறையில் ஊழியர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை சரி செய்ய

### இம்ரான் எம்.பி கோரிக்கை

கிழக்கு மாகாண கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துதெரிவித்த அவர், ‘கிழக்கு மாகாணப் பாடசாலைகளில்பணிபுரியும்கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வெளிநாட்டு விடுமுறை மற்றும் வெளிநாடுகளின் சமய யாத்திரைக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதி உரிய காலத்தில் வழங்கப்படாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக உரிய திகதிக்கு சில மாதங்களுக்கு முன் விண்ணப்பித்தாலும் அனுமதி உரிய காலங்



களில் வழங்கப்படுவதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள்விண்ணப்பித்த விடுமுறை திகதியிலிருந்து வலயக் கல்வி அலுவலகங்களினால் சம்பளம் இடைநிறுத்தப் படுகின்றது. நிர்வாகச் சீர்கேடுகளினால் இந்த அசௌகரியம் ஏற்படுகின்றது.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களின் கோவைகள் மாதக் கணக்கில் மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சில் தேங்கியிருப்பதாகவும் இதனை விரைவு படுத்த இலஞ்சம் எதிர்பார்க்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## பிரபலமடைந்துவரும் ரஸ்யாவின் தேடுதளம்

கணணிகளில் கூகுள் தேடுதளத்திற்கு அடுத்ததாக ரஸ்யாவின் ஜன்டக்ஸ் தேடுதளம் பிரபலம் பெற்றுவருவதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட Cloudflare உலக




இணையத்தள சேவை தொடர்பான 2024 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் அதன் பாவனை 17 விகிதமாக அதிகரித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு பிரிவில் Open Ai என்ற நிறுவனமும், கிறிப்டோ நாணயம் தொடர்பில் Binance என்ற நிறுவனமும் இந்த ஆண்டு முதலிடத்தில் உள்ளன.

எனினும் உலகின் தேடு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை

**தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 18வது ஆண்டு நினைவேந்தல் நாளான 14.12.2024. இல் இதன் அடிப் படையிலேயே எந்தத் தீர்வுக்கும் உழைக்க உறுதிபூணுவது ஈழத்தமிழர் கடமை!**



*வடகிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாக அமையப் பெற்றிருக்கிறார்கள். ஒரு தனித்துவச் சிறப்புடைய மக்கள் என்பதால் அவர்கள், உள்ளக. வெளியகக் கூறுகள் இரண்டிற்கும் உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அந்நியத் தலையீடு எதுவுமின்றித் தமது அரசியல் தகைமையைத் தாமே சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்ளவும், தமது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வைத் தாமே மேம்பாடு செய்யவும் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு.*

*உள்ளக மக்களின் சுயநிர்ணய உரிமைக் தமிழ் கோரிக்கையை தலைவர் பிரபாகரன், 2002 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில், சிறப்பான முறை யில், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.*

*"தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடை யாளத்தைப் பாதுகாத்து, வாழ விரும்புகிறார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ் விரும்புகிறார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளக சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது."*

*தமிழ் மக்கள், தமது வரலாற்றுத் தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் தன்னாட்சி அதிகாரத்தை, அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையை வேண்டினார் பிரபாகரன். ஆயினும் அவர், உள்ளக சுயநிர்ணய உரிமையின் எல்லை வரம்புடன் நின்றுவிடவில்லை. ஐ.நா. பிரகடனத்தில், அரசுகளின் கடப்பாட்டு விதியாக நெறிக்கப்பட்டிருக்கும், 'சம உரிமைகளையும் சுயநிர்ணயத்தையும்', பௌத்த - சிங்கள பேரினவாதச் சகதிக்குள் புதைந்து கிடக்கும் சிங்கள அரசு தமிழர்களுக்கு வழங்கிவிடப் போவதில்லை என்பது பிரபாகரனுக்கு நன்கு தெரியும். ஆகவேதான் அவர் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்வது பற்றி ஒரு கண்டிப்பான எச்சரிக்கையை விடுக்கிறார்.*

*எமது மக்களுக்கு உரித்தான உள்ளக சுயநிர் ணய உரிமை மறுக்கப்பட்டு, பிரதேச தன்னாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்து பிரிந்து சென்று தனியரசை அமைக்கத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்கப் படுவார்கள் என்பதையும் அம் மாவீரர் தின உரையில் அவர் அழுத்தம் திருத்தமாக அறைகூவியிருக்கிறார்.*

*அரச அடக்குமுறைக்கும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக் கும் எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் எமது விடுதலை இயக்கம். தனது அரசியற் கொள்கை நிலைப்பாட்டை. உள்ளக வெளியகக் கூறுகள் இணைந்த சுயநிர்ணய*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

## இலங்கைத் தீவில் ஈழத்தமிழரின் இறைமையின் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நல்லிணக்கம் ஏற்படும்

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள இன்றைய அரசத்தலைவராகத் திகழும் அநுரகுமரதிசநயாக்கா, அவர் தலைவராக விளங்கும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சிறிலங்கா நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர்க்கும் மேலாகக் கொண்ட நிலையில் எதனையும் சட்டவாக்கம் செய்ய வல்ல பலம் மிகுந்த அரசாங்கத்தையும் தனதாகக் கொண்டு விளங்குவதால் அனைத்துலக நாடுகளால் மதிக்கப்படும் அரசியல் தலைமையாகவும் திகழ்கின்றார். இதனை அவர் ஆட்சியமைத்த பின்னர் உலகின் முக்கிய நாடுகள் அனைத்துமே ஜே. வி. பி யுடன் தங்களுக்கு இருந்த வேறுபாடுகளை மறந்து அவரின் அரசுடன் உறவுகளைப் பலப்படுத்துவதில் காட்டி வரும் அக்கறை தெளிவாக்குகிறது.

இந்த தனது பலமான அரசு நிலையினைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைக்கான நியாயமான முயற்சிகளை இனவாதம் எனவும் சிங்களத்தேச இனத்துக்கு சமானமான ஈழத்தமிழர் தேச இனத்தை சமுகம் எனவும்; ஈழத்தமிழர் தாயகத்தை சிறிலங்காவின் வடக்கு எனவும் கிழக்கு எனவும் சமுகங்களுக்கான சமத்துவத் தீர்வு எனவும் இன்று பலவாறான கருத்தியல்களை அநுர அரசு உருவாக்கி வருகிறது.

இது சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஜே ஆர் ஜயவர்த்தனாவும் தங்களின் பலமான அரசாங்கங்ளைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களை அரசற்ற தேச இனமாக்கி இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பால் ஈழத்தமிழரின் நிலத்தை ஆக்கிரமிக்க எடுத்த அதே பாணியில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியையும் மாற்றி விடும் அபாயம் உள்ளது என்பதை எதிர்வு கூறுகிறது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. ஈழத்தமிழர்களின் தாயக மற்றும் உலகளாவிய நிலையிலான ஒருமைப்பாடே இந்த அநுர அரசின் நரித்தந்திர முயற்சிக்கான ஒரே தடையாக அமைய முடியும் என்பதையும் இலக்கு இடித்துரைக்க விரும்புகிறது.

இந்நிலையில் இந்திய அரசின் அழைப்பின் பெயரில் டிசம்பர் மாதத்தின் நடுப்பகுதியாகிய இவ்வாரத்தின் 15ம் நாள் முதல் 17ம் நாள் வரை தனது அணுகுமுறைப் பயணத்தைத் தொடங்கவுள்ளார். அணுகுமுறைப் பயணம் என்பது இருநாடுகளுக்கும் இடையில் உள்ள நட்பினையும் மூலோபாயத் தொடர்புகளையும் வலுப்படுத்துவதற்கான நடைமுறையில் உள்ள உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் புதிய உடன்படிக்கைகளுக்கான திட்டமிடல்களுக்கும் அரசுத்தலைவர் ஒருவர் நாட்டுக்கு வருகின்ற பயணத்தைக் குறிக்கும். இந்திய ஜனாதிபதி அவர்களால் சம்பிரதாய முறைப்படி இந்த அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் இந்தியா செல்லும் சிறிலங்கா ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மற்றும் தேவையான அமைச்சர்களையும் சந்தித்து நேருக்கு நேரான உரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்ட பொருளாதார திட்டங்கள் ஒத்துழைப்புக்கள் குறித்த முன்னாள் சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் கடந்த ஆண்டு யூலை 24 இல் வெளியிட்ட தொலைநோக்கு அறிக்கை இந்தியாவும் இலங்கையையும் இறைமையில் பின்னிப்பிணைந்த பாதுகாப்பு பொருளாதாரக் கூட்டாண்மைக்குள் நிலைபெறுவதை உறுதி செய்வதாகவே அமைந்தது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கு நடை முறைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பில் உள்ள அநுரகுமர திசநாயக்கா இவற்றை எவ்விதம் எதிர்கொள்ளப் போகின்றார் என்பதை அவர் இந்தியாவை அடுத்து சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள அணுகுமுறைப் பயணமே முடிவு செய்யும்.

இவ்விடத்தில் தேசிய மக்கள் சக்தியை "இடதுசாரித் தோழர்களாக"த் தொழுதெழ முயலும் ஈழத்தமிழர்களுக்குச் சிங்கள மார்க்சியம் எத்தகையது என்பதை விளக்கும் வகையில் 'எல்லோருடைய பார்வையும் எல்லோருடைய குரலும்' என்ற விருதுவாக்கியத்துடன் செயற்படும் 'மொடன் டிப்ளோமசி' ஆய்வு மின்னிதழில், செப்டெம்பர் 28ம் திகதி கட்மாண்ட் நேபாலில் உள்ள தெற்காசிய ஆய்வுகள் அபிவிருத்திகள் நிறவனத்தின் ஆய்வாளர் சகஸ்ராண்சுதாஸ் (Sahasranshu Dash) எழுதிய "சிறிலங்காவின் மார்க்சிய தேசியவாதமும் தமிழர் பிரச்சினையும்" என்ற ஆய்வுக்கட்டுரையில் அரகலிய போராட்டத்தில் பங்குபற்றிய சிங்கள அரசியல்வாதிகளும் பல்கலைக்கழக அறிவுஜீவிகளும் கூட "சிங்களவரின் நேத்தன்யாகு" எனப்படக்கூடிய மகிந்த ராசபக்சாவை அவருடைய ஊழல்கள் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகள் குறித்தே ஆழமாக விமர்சித்தார்களே தவிர 2009ம் ஆண்டு பெப்ரவரி 6ம் நாள் முதல் மே மாதம் 18ம்நாள் வரை அவருடைய ஆணையின் கீழ் செய்யப்பட்ட நாற்பது முதல் எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களை ஆடுமாடுகளை வெட்டுவது போலக் கொன்று குவித்த இனஅழிப்புக் குற்றங்கள் குறித்தோ 2009 பெப்ரவரி முதல் 2012ம் ஆண்டுவரை திட்டமிட்ட முறையில் இராணுவத்தினரைக் கொண்டு அவர் செய்வித்த வெளிப்படையான இராணுவ ஆவணமாகவே உள்ள பாலியல் வன்முறைகள் குறித்தோ இது எங்கள் நாடு நாங்கள் எங்கே போவோம் என கமாஸ் பலஸ்தீனியர்கள் போல ஓலிமிட்ட மக்கள் குறித்தோ இஸ்ரேலுக்கு இன்று எதிர்ப்புத் தெரிவிக்கும் சிங்கள இடதுசாரிகள் கூட எதுவுமே பேசாது மௌனமாகவே அன்று செயற்பட்டனர்" என எழுதியுள்ளமையை மீள்நினைவூட்ட இலக்கு விரும்புகிறது. எனவே அநுர அரசினை இடதுசாரித் தோழர்களின் அரசாகப் பார்த்து ஈழத்தமிழர் ஏமாற்றமடையாது எச்சரிக்கையாக இருக்க வேண்டியது முக்கியம். ஆயினும் சிங்களவர்களுக்கு ஊழல் ஒழிப்பு குடும்ப ஆட்சி நீக்கம் பொருளாதாரத்தை மீட்கும் முயற்சிகள் கல்வி மாற்றங்கள் சட்டத்தின் ஆட்சி போன்ற நல்ல செய்கையில் அநுர அரசு ஈடுபடுகையில் நாமும் பாராட்டுவோம். மேலும் இடதுசாரித்தன்மையுடன் செயற்பட்டு ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையையும் தீருங்களென அழைப்பு விடுப்போம்.

இதற்கு ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது மக்கள் எண்ணிக்கையில் அல்ல, இறைமைகளின் சமத்துவத்தினை ஏற்கும் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய காலனித்துவத்தால் தீர்க்கப்படாத அனைத்துலகப் பிரச்சினையாக ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக உள்ளது என்ற அடிப்படையினை அநுர அரசுக்குத் தெளிவுபடுத்திட வேண்டும். இதன் வழி புதிய அரசியலமைப்பில் சிங்கள சிறிலங்காவில் வாழும் சமுகமாக (community) ஆக ஈழத்தமிழரைச் சிங்கள பௌத்த பேரினவாத உணர்வில் மாற்றாது வடக்கு கிழக்குத் தாயகத்தில் இறைமையுடன் திகழும் மக்களாக ஏற்று இலங்கைத் தீவின் பாதுகாப்பு பொருளாதாரச் சிக்கல்களில் ஒன்றுபட்டு உழைக்க வழிசெய்யுமாறு வலியுறுத்துவோம்.

14. 12. 2024இல் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 18வது ஆண்டு நினை வேந்தலை ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகெங்கும் பெருமதிப்புடன் நினைவு கூர்கின்றமையை அநுர அரசுக்குச் சுட்டிக்காட்டி மதிப்புக்குரிய பாலா அண்ணனின் பேச்சுவார்த்தை முயற்சிகளின் எழுத்துக்களையும் ஆவணங்களையும் அநுர அரசு ஒருமுறை பொறுமையாக வாசித்து உணரின் நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் எவ்வாறு இலங்கைத் தீவினை ஈழத்தமிழரும் சிங்களவர்களும் முஸ்லீம் மக்களும் மலையக மக்களும் இணைந்து தன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார எழுச்சிகளை உறுதிப்படுத்தலாம் என்பதையும் இவ்விடத்தில் பரிந்துரையாக இலக்கு முன்வைக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**



# டில்லி பயணமாகும் அநுர!

## மோடி சொல்லப்போகும் செய்தி என்ன?

அகிலன்

இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் தன்னுடைய முதலாவது வெளிநாட்டுப் பயணமாக அநுரகுமார திசநாயக்க ஞாயிற்றுக்கிழமை புதுடில்லிக்குச் செல்கின்றார். மூன்று தினங்கள் டில்லியில் தங்கியிருக்கும் காலத்தில் முக்கியமான பேச்சுக்களை அவர் நடத்தவுள்ளார். இந்திய எதிர்ப்பையே தமது பிரதான கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த ஜே.வி.பி.யின் தலைவரான அநுர இலங்கையின் தலைவர் என்ற முறையில் உத்தியோகபூர்வ விஜயமாக புதுடில்லி செல்வது அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றது.


தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கையில் இந்தியாவுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்பதை இதன் மூலமாக அநுர உணர்த்த முற்படுகிறார். அவ்வாறு உணர்த்த வேண்டிய தேவையும் அவருக்குள்ளது. இந்தியா குறித்த தேசிய மக்கள் சக்தி அரசின் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கப்போகிறது என்பதை டில்லியில் அவர் நடத்தும் பேச்சுக்கள் வெளிப்படுத்தும். மறுபுறம் இலங்கையின் புதிய அரசு குறித்த டில்லியின் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கப்போகின்றது என்பதையும் அடுத்து வரும் மூன்று தினங்களும் வெளிப்படுத்தும்.

சீனாவுக்கு சார்பான ஒருவராகவே அநுர நோக்கப்படுகின்றார். அதனைவிட, சீனாவும் அவருக்கான அழைப்பை விடுத்திருந்தது. ஜனவரியில் சீனாவுக்கான பயணத்தையும் அவர் மேற்கொள்ளவிருக்கிறார். சீனாவை முந்திக்கொண்டு டில்லிக்கு அவர் செல்வதன் மூலமாக, இந்தியாவுக்கு தான் முன்னுரிமை கொடுப்பதாகக் காட்டிக் கொள்ள அநுர முற்படுகின்றார். புதிதாக அதிகாரத்துக்கு வரும் தலைவர்கள் அனைவருமே இந்தியாவுக்கான விஜயத்தையே முதலில் மேற்கொள்வார்கள். ரணில் விதிவிலக்காக இருந்தார். அதற்கும் காரணம் இருந்தது.

"அண்டை நாடுகளுக்கு முதலிடம்" என்பதை தமது வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையாக இந்தியா கூறிக்கொள்கின்றது. இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம்தான் இந்தியாவின் பொறுமைக்குச் சோதனையாகத்தான் இருக்கிறது. போதாதற்கு கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அடிக்கடி மேற்கொள்ளும் விஜயங்களும், அதன்போது அவர் சொல்லும் கருத்துக்களும் கூட இந்தியாவைச் சீண்டுவதாகவே அமைந்திருக்கின்றது.

இந்தியாவின் தெற்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இலங்கை, புதுடில்லிக்கு மிகப் பெரிய புவிசார் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கையின் உட்கட்டமைப்புத் திட்டங்களில் சீன முதலீடுகள், மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தி, கொழும்பு துறைமுக நகரம் உட்பட இலங்கையில் சீனாவின் வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் மூலோபாய செல்வாக்கு என்பன இந்தியாவை நிம்மதி இழக்கச் செய்துள்ளன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் உதவிகள்தான் இலங்கைக்கு அதிகளவுக்கு உதவியது. நிதியுதவி மற்றும் கடன் வசதிகள், அத்தியாவசிய பொருட்கள் வழங்கல், முதலீடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள், என்பவற்றுடன், சர்வதேச அனுசரணையை உறுதி செய்வதிலும் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. குறிப்பாக, சர்வதேச நிதி நிதியம் (IMF) மற்றும் உலக வங்கியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து இந்தியா, இலங்கைக்கான நிதியுதவிகளை உறுதி செய்ய உதவியது.



2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரகலய மூலமாக தமது செல்வாக்கை ஜே.வி.பி. உயர்த்திக்கொண்டதையும், இலங்கை அரசியலில் ஒரு தீர்க்கமான சக்தியாக அது வளர்ந்துள்ளது என்பதையும் கடந்த வருடமே புதுடில்லி கணித்திருந்தது. அதனால்தான், இந்தியாவுக்கான விஜயம் ஒன்றுக்காக அநுர குழுவினரை டில்லி அழைத்திருந்தது.

இந்த அழைப்புக்கு மூன்று காரணங்கள் இருந்தன. இந்திய எதிர்ப்பாளர்களாக அடையாளங்காணப்பட்ட ஜே.வி.பி. தலைமையுடன் நட்புறவை ஏற்படுத்த வேண்டிய தேவை டில்லிக்கு இருந்தது முதலாவது காரணம். அத்துடன் இந்தியா குறித்த ஜே.வி.பி.யின் அணுகுமுறை எவ்வாறுள்ளது என்பதை மதிப்பிடுவதற்கான ஒரு முயற்சியாகவும் இது அமைந்தது. இது இரண்டாவது காரணம். தமது பலத்தையும், முக்கியத்துவத்தையும் ஜே.வி.பி. தலைமைக்கு உணர்த்த வேண்டும் என்றும் இந்தியா விரும்பியிருக்கலாம்.

அநுர தலைமையிலான ஜே.வி.பி. தூதுக்குழு ஐந்து நாள் விஜயமாக மூன்று இந்திய நகரங்களுக்குச் சென்றிருந்தது. டில்லி, அகமதாபாத், திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்கு அவர்கள் சென்றார்கள். தொழில்நுட்ப, விஞ்ஞான, விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் இந்தியா பெற்றுள்ள வளர்ச்சி அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இந்த விஜயத்தின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உட்பட முக்கிய இந்திய தலைவர்களை அவர்கள் சந்தித்தார்.

பின்னர் மீண்டும், கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அஜித் டோவல் இலங்கை வந்த போது, அநுரவுடன் மற்றொரு சந்திப்பை நடத்தினார். அநுரவின் வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவை நோக்கி என்ன அணுகுமுறையை மேற்கொள்வார் என்பதை அறிவது அந்த சந்திப்புக்களின் நோக்கமாக இருந்தது. இந்த விஜயங்களின் மூலமாக இந்தியாவுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான உறவுகளில் முன்னேற்றங்களையும் அவதானிக்க முடிந்தது. இந்தியா குறித்த தமது வழமையான இறுக்கமான போக்கையும் ஜே.வி.பி. தளர்த்திக் கொண்டது.

ஆனால், அநுர ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையை நோக்கிய சீனாவின் இராஜதந்திர செயற்பாடுகளும் தீவிரமடைந்திருக்கிறது. இலங்கை எதிர்கொள்ளும் பொருளதார நெருக்கடிக்கான தீர்வில் தம்மால் முக்கிய பங்கை வழங்க முடியும் என்பதையும் சீனா உணர்த்துகின்றது. குறிப்பாக, உடனடியாக அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு இலங்கைக்குள்ள இலகுவான வழி அதிகளவுக்கு உல்லாசப் பயணிகளை வரவளைப்பதுதான். அடுத்த வருடத்தில் தமது நாட்டிலிருந்து சுமார் பல்லாயிரம் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு சீனா திட்டமிடுவதாக ஒரு தகவல் உள்ளது. இது சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும். இதனைவிட, இலங்கையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் சீனா உதவப் போகின்றது.

இந்தப் பின்னணியில்தான் அநுரவின் டில்லி விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த விஜயத்தின் போது, இருதரப்பு வர்த்தகம், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவின் ஆதரவு, கடல்சார் பாதுகாப்பு போன்ற முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனைவிட, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்தும் பேசப்படலாம். இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்படவிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் பொருளாதார மீட்சி என்பதுதான்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பவளவிழா காணும் தமிழரசுக்கட்சியும்! பரிதாபமான தமிழ்த்தேசிய அரசியலும்!

பா.அரியநேத்திரன்

இந்தவாரம் எதிர்வரும் 2024, டிசம்பர்,18,ல் தந்தை செல்வா உருவாக்கிய இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி பவள விழா காண்கிறது. 1944, ஆகஷ்ட் 29ல் ஜீ ஜீ பொன்னம்பலத்தால் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியில் கருத்து வேறுபாடு காரணமாக விலகிய முக்கிய தலைவர்களான தந்தை செல்வா, வன்னிய சிங்கம், நாகநாதன் ஆகியோர் 1949 டிசம்பர் 18 ம் திகதி கொழும்பு மருதாணையில் கூடி பேசி “இலங்கத்தமிழ் அரசுக் கட்சியை” ஆரம்பித்தனர் அதன் ஸ்தாபக தலைவராக தந்தை செல்வா நியமிக்கப்பட்டார்.



அன்று உருவாக்கிய இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் 75வது பவளவிழாவில் கால் பதிக்கிறது. அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் 1944ல் ஆரம்பித்தாலும் அந்த கட்சி தாய்க்கட்சி என்ற அந்தஷ்தை பெறவில்லை. இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை ஏன் தாய்க்கட்சி என அழைப்பது என்றால் தந்தை செல்வா தமிழரசுக்கட்சியை வெறும் தேர்தல் கட்சியாக மட்டும் ஆரம்பிக்கவில்லை.

இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும். அதற்கு ஒரு வழி சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை பெறுவதுதான் என்ற நோக்கில் தமிழ் மக்களை அணிதிரட்டி பல்வேறுபட்ட அகிம்சை ரீதியிலான போராட்டங்களை வட கிழக்கு முழுவதும் மாவட்ட ரீதியாக பிரதேச வேறுபாடுகள் இன்றி முன்னெடுத்தார். அது தமிழ்பேசும் மக்கள் மத்தியில் தமிழ்தேசிய உணர்வுகளை தூண்டியது.தாயகத்தின் விடுதலைக்காக போராடும் இயக்கமாக தமிழரசுகட்சி தொடர்ந்து செயல்பட்டதால் தாய்க்கட்சி என்ற உயர் நிலை இதற்கு கிடைத்தது. இலங்கை தமிழரசுக்கட்சி தேர்தல் அரசியலில் முதலாவதாக 1952,மே,24ல் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் ஏழு தொகுதிகளில் போட்டியிட்டு 2, தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. அந்த இரண்டு ஆசனங்களில் ஒன்று காங்கேசன்துறை (தந்தை செல்வா)அடுத்தது திருகோணமலை (இராஜவரோதயம்) மட்டும் வெற்றி பெற்ற தமிழரசுகட்சியின் தலைவர் தந்தை செல்வா சோரவில்லை அதன்பின்னர்தான் உத்வேகத்துடன் தமிழரசுகட்சியை மக்கள் மயப்படுத்தினார்.

1956, ஏப்ரல்,05ல் இடம்பெற்ற மூன்றாவது பாராளுமன்ற தேர்தலில் வடகிழக்கில் 14, தொகுதிகளில் தமிழரசுக்கட்சி வேட்பாளரை நிறுத்தி 10, தொகுதிகளில் வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்ததார். 1956ல், தந்தை செல்வா மட்டக்களப்பு தொகுதியில் செல்லையா இராசதுரையையும், பட்டிருப்பு தொகுதியில் சீ மூ இராசமாணிக்கத்தையும் கல்முனை தொகுதியில் எம்.எஷ். காரியப்பரையும் உள்வாங்கி இணைந்த வடகிழக்கில் தமிழ்த்தேசிய அரசியலுக்கு அத்திவாரம் இட்டார். அதில் இருந்து தமிழ்பேசும்மக்களின் அகிம்சை ரீதியிலான சகல போராட்ட அரசியலும் மேலும் கூர்மை பெற்றது. தமிழரும் முஷ்லிம்களும் இணைந்து தமிழரசு கட்சியின் கொள்கையில் செயல்பட்டனர்.

1956ல் இருந்து எழுச்சி பெற்ற தமிழரசுக்கட்சியானது பல மகாநாடுகளை நடத்தி ஒற்றுமையாக தலைவர் உட்பட சகல நிர்வாகத் தெரிவுகளும் இடம்பெற்றன. இதுவரை நடந்த மகாநாடுகளும் ஒற்றுமையாக தெரிவு செய்யப்பட்ட தலைவர்களும்...

***1. 1951,ஏப்ரல்,13,14,15ல் திருகோணமலையில், தலைவராக தந்தைசெல்வா,***

***2. 1953,ஜனவரி,01ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக தந்தைசெல்வா,***

***3. 1955 ஏப்ரல்,16,17ல் திருகோணமலையில் தலைவராக சு.வன்னியசிங்கம்,***

***4. 1956,ஆகஷ்ட்,,17,18,19ல் திருகோணமலையில் தலைவராக சு.வன்னியசிங்கம்,***

***5. 1957,யூலை,27,28ல் மட்டக்களப்பில் தலைவராக சு.வன்னியசிங்கம்,***

***6. 1958,மே,23,24,25ல் வவுனியாவில் தலைவராக இராஜவோதயம்,***

***7. 1961,ஜனவரி,21ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்,***

***8. 1962,ஆகஷ்ட்,31ல் மன்னாரில் தலைவராக சீ.மூ. இராசமாணிக்கம்***

***9. 1964,ஆகஷ்ட்,21,22,23ல் திருகோணமலையில் தலைவராக தந்தை செல்வா,***

***10. 1966,யூன்,23,24,25ல் கல்முனையில் தலைவராக டாக்டர் நாகநாதன்,***

***11. 1969,ஏப்ரல்,07,08,09ல் யாழ்ப்பாணம் உடுவிலில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்,***

***12. 1973,செப்டம்பர்,07,08,09ல் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் தலைவராக அ.அமிர்தலிங்கம்,***

***13. 2010, ஜனவரி,13ல் யாழ்ப்பாணம் நல்லூரில் தலைவராக இரா.சம்பந்தன்,***

***14. 2012,மே,26,27ல் மட்டக்களப்பில் தலைவராக இரா.சம்பந்தன்,***

***15. 2014,செப்டம்பர்,06,07ல் வவுனியா தலைவராக மாவை சேனாதிராசா,***

***16. 2019,யூன்,29,30ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக மாவை.சேனாதிராசா.***

ஆனால் 17, வது தேசிய மகாநாடு நடத்துவதற்காக 2023, ஜனவரி,21ல் தலைவர் தெரிவு பொதுச் சபையால் வாக்கெடுப்பு மூலம் தெரிவானது. வழமைக்கு மாறாக தேர்தலில் தலைவர் தெரிவு இரகசிய வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது. இதுவே முதல்தடவை. அதில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் 184 வாக்குகளை பெற்று தலைவராக ஜனநாயக ரீதியில் தெரிவானார். அவரை நேரடியாக எதிர்த்து போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மதியாபரணம் ஆபிராகம் சுமந்திரன் 137 வாக்குகளை மட்டும் பெற்று தோல்வியடைந்தார்.




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலைவர் பதவிக்காக வேட்பு மனுவை வழங்கிய நிலையில் அவரும் சிறிதரனின் வெற்றிக்காக உழைத்தார். இதன் எதிரொலியால் 2023. ஜனவரி, 27ல் இடம்பெற்ற பொதுச்சபை கூட்டத்தில் தமக்கு பொதுச்செயலாளர் பதவி தரப்படவேண்டும். அப்போதுதான் இரண்டு அணிகளாக பொதுச்சபை உள்ளதை ஒரு அணியாக செயல்படலாம் என பகிரங்கமாகவே சுமந்திரன் கூறினார், அவர் கிழக்கு மாகாணத்தை கணக்கில் எடுக்காமல் புறக்கணிப்பு நோக்கில் இந்த கருத்து அமைந்தது. அவரே இரண்டு அணிகள் என்ற சொல்லை உறுதிப்படுத்தினார்.

இந் நிலையில் மட்டக்களப்பில் தற்போதய பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசனை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் முன்மொழிந்தார், இவ்வாறான நிலையில் மத்தியகுழுவில் ஏட்டிக்கு போட்டியான கருத்துகள் இடம்பெற்று பின்னர் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனை பொதுச்செயலாளராக மத்தியகுழுவில் இணக்கம் காணப்பட்ட நிலையில் பொதுச்சபை உறுப்பினர்கள் அதனை ஏற்க மறுத்து ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக மகாநாடு நடத்தப்படவில்லை. அதனால் சுமந்திரன் அணியை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# மனித உரிமைகள் என்பது...

ஹஸ்பர் ஏ ஹலீம்

வளர்ந்து வருகின்ற இன்றைய தொழிநுட்ப உலகில் காலத்திற்கு காலம் மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன், சமூக, அரசியல், கலாசார பொருளாதார விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப ரீதியாக துரித கதியில் மனித வாழ்க்கையின் இருப்பினை உறுதிசெய்து கொள்ளும் வகையில் இன்றைய சிந்தனையில் மனித உரிமைகளும் அதனுடன் இணைந்த மனித பொறுப்புக்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத வகையில் அமைந்துள்ளது.

மேலும் காலத்தின் தேவைக்கேற்ப முக்கியத்துவமும், முன்னேற்றகரமான மனித வாழ்வின் தன்மானம், உயிர்வாழ்தல் அடிப்படையில் மனித வாழ்க்கையில் உரிமைகளின் தாற்பரியமும் உணரப்பட்டு வருகின்றது.

ஒரு நாணயத்தின் இருபக்கம் போல் மனித உரிமைகளும், மனித பொறுப்புக்களும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்பினை கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் சமூதாயத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமை உள்ளது.

மனிதனின் இருப்பிற்கு அவசியமான உரிமைகள் 'மனித உரிமைகள்', எனப்படுகின்றது. மனித உரிமைகள் உலகளாவிய ரீதியில் பல் வேறு வகையாக இனங்காணப்பட்டுள்ளது. பொதுவாக உரிமைகள் என்பது சமூகத்தாலும், அரசினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இறுதியாக நடைமுறைப்படுத்தப்படும் மனித கோரிக்கைகள் ஆகும்.



உலகில் இடம்பெற்ற மாபெரும் போர்களான 1ம் உலகப் போர்(1914-1918) உலக மக்களை கதிகலங்கச் செய்ததுடன், அதன் பின்னரான வர்சேல்ஸ் உடன்படிக்கையின் வாயிலான தோற்றம் பெற்ற சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து இடம்பெற்ற 2ம் உலகப் போர் (1939-1945) காரணமாக ஏற்பட்டது. இதில் ஏற்பட்ட இழப்பினைத் தொடர்ந்து உலகில் 3ம் உலகப்போருக்கான சூழ்நிலைகள் தோன்றுவதைத் தடுக்கும் வகையிலும், உலக சமாதானத்தினை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு ஐப்பசி 24ம் திகதி தோற்றம் பெற்றது. அதன் பின்னராக மூன்று வருட காலப்பகுதியில் இலங்கை சுதந்திரமடைந்தது. அதே காலப்பகுதியில் 1948டிசம்பர் மாதம் 10ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, மனித உரிமைகள் பற்றி பிரகடனத்தை வெளியிட்டது.

அந்தவகையில் 2024ம் ஆண்டிற்கான மனித உரிமைகள் தினத்தின் கருப்பொருள் " Our rights, our future, rights now" என்பதாகும். ஐக்கிய நாடுகள் சபையானது உலக நாடுகளில் உள்ள மக்களின் சமாதானம், தேசிய நல்லுறவு,தேசிய ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் எமது உரிமைகள், எமது எதிர்காலம் என விமர்சனரீதியாக எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளத்தை பொது மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

சுதந்திரமாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உரிமைகளை அனுபவித்து வாழ்வது அவனது உரிமையாகும். அந்த உரிமைக்கான அச்சுறுத்தல்களை அகற்றி தேசிய நல்லுறவை வலுப்படுத்துவதே சுதந்திர அரசியல் யாப்புக்களைக் கொண்ட ஒவ்வொரு நாட்டினதும் பொறுப்புக்களாகும்.

மனித உரிமைகள் சில நாடுகளில் வரையறுக்கப்பட்டு அரசியல் யாப்புக்களில் பொறிக்கப்பட்டு, அடிப்படை உரிமைகளாக பாதுகாக்கப்பட்டு, உலக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கீழ் சில அமைப்புக்களாலும்,நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நாளில் எவ்வித வேறுபாடுமில்லாத வகையில் எல்லாப் பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் மனித உரிமை தொடர் பான பதாதைகளை காட்சிக்கு வைக்கவும், கொள்கைகளை பரப்பவும், எல்லா சுதந்திர மனிதர்களை சிந்திக்கத் தூண்டி உயிர்வாழும் நிலையை பலப்படுத்தும் வகையில் உரிமைகளைப் பெறத் தூண்டவும் அங்கத்துவ நாடுகள் செயற்படுகின்றன.

சிறுவர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள 30 உறுப்புரைகளில் முக்கியமானவற்றை அறிந்திருக்க வேண்டும். அந்தவகையில்,

**உறுப்புரை: 1- சுதந்திரமாகப் பிறந்த அனைவரும் சமனானவர்கள்.**

**உறுப்புரை: 2- இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் போன்ற வேறுபாடு கிடையாது.**

**உறுப்புரை: 3- உயிர்வாழும் உரிமை.**

**உறுப்புரை: 4 -அடிமை நிலையில் இருந்து விடுபடும் உரிமை.**

**உறுப்புரை: 5- சித்திரவதையிலிருந்து விடுபடும் உரிமை.**

**உறுப்புரை: 7-எல்லோரும் சட்டத்தின் முன் சமனானவர்கள்.**

**உறுப்புரை: 8- அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிரான தேசிய நியாயம் பெறும் உரிமை.**

**உறுப்புரை: 11 -குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்திற்கிணங்க சுற்றவாளியாக கருதப்பட வேண்டும்.**

**உறுப்புரை: 13 -ஒவ்வொரு நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதற்கும் வசிப்பதற்கும் உரிமையுண்டு.**

**உறுப்புரை: 15 -ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உறுப்புரை: 16 -திருமணம் செய்வதற்கான உரிமை.**

**உறுப்புரை: 17 -சொத்துரிமை.**

**உறுப்புரை: 18-சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றை வெளிப்படுத்தும் உரிமை.**

**உறுப்புரை: 19-பேச்சுச் சுதந்திரம்.**

**உறுப்புரை: 20- சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமை.**

**உறுப்புரை: 21- பிரதிநிதிகள் மூலமாகவும் பங்கு பெறும் உரிமை,**

**உறுப்புரை: 22- சமூகப் பாதுகாப்பு உரிமை.**

**உறுப்புரை: 23- தொழிலுக்கேற்ற சம்பளம் பெறும் உரிமை.**

**உறுப்புரை: 24-இளைப்பாறுகைக்கும், ஓய்விற்கும், சமகால விடுமுறைக்குமான உரிமை.**

**உறுப்புரை: 25 -சமூகத் தேவைகளுக்கும் குடும்ப நல்வாழ்வு, வாழ்க்கைத்தரத்திற்கான உரிமை.**

**உறுப்புரை: 26 -கல்வி கற்பதற்கான உரிமை.**

**உறுப்புரை: 27-கலைகளைக் கற்றல், அறிவியல் முன்னேற்றம் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.**

மனித உரிமைகள் ஆணையகத்தின் OHCHR அறிக்கை-2024 இல், சில பிற்போக்கான அரசாங்கக் கொள்கைகள், போதிய சமூகப் பாதுகாப்பின்மை காரணமாக நாட்டின் பொருளாதார நெருக்கடியானது இலங்கையர்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார நிலைமை, மனித உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. இலங்கை மக்களில் அதிகமானோர் மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்களாக உள்ளனர். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானோர் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1983-2009 உள்நாட்டுப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில், கடந்தகால மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள், பொறுப்புக்கூறலுக்காக செயற்பட்ட ஆர்வலர்கள் காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர்.



ஒவ்வொரு மனிதர்களது வாழ்வை பூரணப்படுத்தும் வகிபங்கினை ஆற்றும் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் பல இலங்கையில் காணப்படுகின்றன. அந்த வகையில் சர்வதேச அளவிலான ஏற்பாடுகளாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த வகையில் சமவாயங்கள், பிரகடனங்கள், உடன்படிக்கைகள் என்பனவும் சர்வதேச மன்னிப்பு சபை, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் 30 உறுப்புரைகளின் கீழான ஏற்பாடுகள், நல்லாட்சியை முன்னெடுக்கும் Trans Federancy International Government, Asian Develop Bank என்பன அமைகின்றது.

தேசிய ரீதியில் நாடுகளுக்கிடையில் அடிப்படை உரிமைகளை பாதுகாத்துக் கொள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அபிவிருத்திக்கு வாய்ப்பாகும் மாகாண சபைகள்

துரைசாமி நடராஜா

இலங்கையின் சமகால அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து மாகாண சபை முறையினை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அரசு தரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன. இது சாத்தியப்படுமிடத்து தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதென தமிழ்த்தரப்பினர் கேள்வி எழுப்புகின்றனர். இதேவேளை புதிய அரசியலமைப்பு வரும் வரை மாகாண சபை தொடரும் என்று அரசாங்கத்தின் பிந்திய செய்திகள் வலியுறுத்துகின்றன. இந் நிலையில் மாகாண சபை முறையின் ஊடாக மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக் கொண்டுள்ள நிலையில், மாகாண சபை முறை இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் அபிவிருத்தி கேள்விக்குறியாகுமென்றும் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.




1978 ம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு முன்வைக்கப்பட்டது. சமகாலத்தில் நடைமுறையில் உள்ள இந்த யாப்பு பல்வேறு குளறுபடிகளுக்கும் வித்திட்டுள்ள நிலையில் நாட்டு மக்களின் நம்பகத்தன்மையையும் இழந்துள்ளது. அத்துடன் இந்த யாப்பில் இருபதுக்கும் அதிகமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது புதிய அரசியல் யாப்பின் அவசியத்தை வேண்டி நிற்கின்றது.



1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையின் ஊடாக அதிகாரப்பரவலுக்கான அடிப்படையாக அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் முன்வைக்கப்பட்டு மாகாண சபை முறை உருவாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட பல கட்சிகள் ஆரம்பம் முதலே இதனை எதிர்த்து வந்தன. பிரதான தரப்பான விடுதலைப் புலிகளும் இணக்கப்பாடற்ற தன்மையையே வெளிப்படுத்தினர். 2008 ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில், ஜே.வி.பி. யின் முயற்சியால் உயர்நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதும் தெரிந்ததேயாகும்.

### பாரதப் பிரதமர் மன்மோகன்

13 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு மையப்படுத்தப்பட்ட ஆட்சியில் அதிகாரப் பகிர்வு அம்சம் சேர்க்கப்பட்டபோது ,பரஸ்பர விரோதத் தன்மையொன்று காணப்பட்டபோதும் இலங்கை அரசியலுக்கு அது ஒரு புதிய அனுபவமாக காணப்பட்டது என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். ஆட்சியில் அதிகாரப்பரவலுக்கான அடிப்படையாக 13 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டபோதும், இந்தியாவினால் வற்புறுத்தியே 13 ஆவது திருத்தம் திணிக்கப்பட்டதாக இனவாதிகள் தொடர்ச்சியாக கண்டனக் குரலெழுப்பி வந்தனர். இலங்கையில் நடைமுறைப்படுத்தப் படவேண்டிய சட்டங்கள் பிறிதொரு நாட்டினால் தீர்மானிக்கப்படுவது ஏற்புடையதல்ல என்றும் இவர்கள் தெரிவித்தனர். எனினும் 13 ஆவது திருத்தத்தை இந்தியா, இலங்கை மீது பலவந்தமாக திணித்தது என்ற கருத்து பிழையானதாகுமென்று புத்திஜீவிகள் சிலரும் வலியுறுத்தி இருந்தனர். மேலும் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் அதிகாரப்பகிர்வு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியா ஈடுபட்ட வேளையில் உண்மையிலேயே 13 ஆவது திருத்தச்சட்ட வரைபு ஜே.ஆர்.ஜயவர்த்தன நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் புத்திஜீவிகள் மேலும் வலியுறுத்தி இருந்தனர்.



13 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டு சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாகியுள்ள நிலையில் அக்கால சூழ்நிலைக்கு அது ஏற்புடையதாக இருந்தது. எனினும் இன்றைய சூழ்நிலைக்கு அது பொருத்தமானதாக இல்லை.எனவே 13 ஐயும் விஞ்சிய தீர்வு தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்பதும் சிலரின் கருத்தாக இருந்தது. இதனிடையே 2008 ம் ஆண்டில் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்றும், 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வொன்று குறித்து பரிசீலிக்க வேண்டுமெனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடனான சந்திப்பின் போது வலியுறுத்தி இருந்ததாகவும் அரச வட்டாரங்களில் பெரிதும் பேசப்பட்டது. இதற்கு மஹிந்த சாதகமான பதிலை வழங்கி இருந்ததாகவும் பேச்சுக்கள் அடிபட்டன. எனினும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கமைய ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களையே முழுமையாக அமுல்படுத்த பின்னடிக்கும் அரசாங்கம், 13 இலும் விஞ்சிய தீர்வு தொடர்பில் வாக்குறுதி வழங்குவது போலியான வெளிப்பாடே என்றும் பலர் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.



இலங்கையில் மாகாண சபை அறிமுகப் படுத்தப்பட்டமை ஒரு முக்கிய அம்சமாகும். என்றபோதும் அது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்ற வலுவான குற்றச்சாட்டுமுள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபைகளுக்குபகிரப்படாதநிலையில்பகிரப்பட்ட அதிகாரங்கள் கூட பாரியளவிலான காணிச் சுவீகரிப்பு தொடக்கம் நகர மற்றும் கிராமிய திட்டமிடல் சட்டம் (Town and Country Planning Act) திவிநெகும வரையான செயற்பாடுகளினூடே படிப்படியாக குறைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்கிறார் கலாநிதி பாக்கியஜோதி சரவணமுத்து. மாகாண சபைகள் வெள்ளை யானையாகும் என்றவொரு கருத்தும் இருந்து வருகின்றது.

### எவ்வித பலனும் இல்லை

மாகாண சபைகள் தொடர்பில் பல்வேறு வாத பிரதிவாதங்கள் இருந்து வரும் நிலையில், இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறை



மையை முடிவுக்கு கொண்டு வரவும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். சுமார் 37 வருட காலமாக நடைமுறையிலுள்ள மாகாண சபை முறைமையால் நாட்டுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இந்திய அரசின் எண்ணத்தில் மாற்றம் வருமா?



# காத்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள்

**உலக புலம் பெயர் தினம் - ஜனவரி, 12,13 தேதிகளில் சென்னையில் கொண்டாடப்படுகின்றது.**

ஊடகவியலாளர்
**தமிழ்ப் பிரபாகரன்**

தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகள் எதிர்கொள்ளும் சமகால சவால்களை புரிந்து கொள்ள, எந்த வகையில் இங்குள்ள அரசுகள் அணுகுகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசுகள் என இங்கு குறிப்பிடுவது- தமிழ்நாடு அரசு, இந்தியா அரசு ஆகும்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தமட்டில், அகதிகள் முகாம்களை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் என அடையாளப் படுத்தியது, அவர்களுக்கு கான்கரிட் வீடுகளை கட்டியெழுப்புவது, அகதிகளுக்காக வழங்கப்படும் உதவித்தொகையுடன் தமிழ்நாட்டில் மகளிருக்கு வழங்கப்படும் 1000 ரூபாயை உரிமைத் தொகை முகாம்களில் உள்ள பெண்களுக்கும் வழங்குவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதே சமயம், எதிர்காலம் குறித்த நிச்சயத் தன்மையற்ற சூழல், முறையான வேலைவாய்ப்பு கிடைப்பதில் சிக்கல் போன்ற பிரச்சினைகளை அகதிகள் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர் என்பதை மறுக்க இயலாது.



இந்திய அரசை பொறுத்தமட்டில், அவர்களை சட்ட ரீதியாக சட்டவிரோத குடியேறி களாகவே அணுகுகிறது.

தமிழ்நாடெங்கும் 106 முகாம்களும் 2 சிறப்பு முகாம்களும் உள்ளன. முகாம்களுக்கு உள்ளே சுமார் 60 ஆயிரம் பேரும் முகாம்களுக்கு வெளியே சுமார் 30 ஆயிரம் பேரும் வசித்து வருகின்றனர். அகதி முகாம்களை எடுத்துக் கொண்டால், அதில் ஈழத்தமிழ் அகதிகள் மட்டுமின்றி மலையகத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படும் இந்திய வம்சாவளி தமிழர்கள் உள்ளனர்.

தமிழ் அகதிகளுக்கான தீர்வு என்று வரும் பொழுது அதன் முடிவு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் பின்னிப்பிணைந்திருக்கிறது. தமிழ்நாடு மாநில அரசு ஒரு மாநில அரசின் எல்லைக்குட்பட்ட வகையில், கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்வாதார உதவிகளை மட்டுமே செய்து வருகிறது. பிரதான கட்சிகளாக திராவிட முன்னேற்ற கழகம் திமுக, அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அதிமுக ஆகிய இரு கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளிலும் 'இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்திய குடியுரிமை' என்பது இடம்பெற்றிருந்தாலும் அதன் முடிவு இந்திய அரசால் மட்டுமே சாத்திப்படக்கூடியதாகும்.



தமிழ் அகதிகள் மூன்றுநிலையில் இங்கு வசிக்கின்றனர். ஒன்று இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்கன எண்ணமின்றி வாழ்பவர்கள்- இவர்கள் இந்திய குடியுரிமையை கோரி இருக் கின்றனர். இரண்டு பாதுகாப்பான வாய்ப் பிருந்தால் இலங்கைக்கு திரும்பலாம் என்ற எண்ணத்தில் வாழ்பவர்கள். மூன்று வேறொரு நாட்டில் குடியேறும் அல்லது தஞ்சம் கோரும் எண்ணத்துடன் இந்தியாவில் தற்காலிக பாதுகாப்பு வேண்டி வசிப்பவர்கள்.



இதில் இந்திய குடியுரிமை கோரும் அகதிக ளின் கோரிக்கை முக்கியமானதாகப் பார்க்கப் படுகிறது. ஏனெனில் பல்லாண்டுகளாக முகாம் களிலேயே வசித்து இலங்கையே என்னவென்று தெரியாத தங்களது குழந்தைகள் இந்தியாவில் வாழ்வை கட்டியெழுப்பிக் கொள்வதே சரியானதாகவும் சாத்தியமானதாகவும் இருக்கும் என பலர் கருதுகின்றனர். இந்திய வம்சாவளி தமிழ் அகதிகள் பலரும் இந்த குடியுரிமையினையே விரும்புகின்றனர்.



ஆனால், கடந்த 2019ம் ஆண்டு இந்தியா அரசு, குடியுரிமைத் திருத்தச்சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்த போதிலும் அதில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக பரிசீலிக் கப்படும் என மத்தியில் உள்ள பாஜக அரசு தரப்பு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்




# அஸாட்டின் பதவி விலகல்

## ஈரானின் செல்வாக்கில் ஏற்படுத்தியுள்ள பின்னடைவு

### பகுதி 1

தமிழில்: ஜெயந்திரன்

மிக நீண்ட காலம் சிரியாவின் அதிபராக இருந்த பஷார் அஸாட் (Bashar Assad), அங்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக, நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கிறார். சிரியாவைப் பொறுத்தவரையிலும், மற்றும் பூகோள ரீதியாக மத்திய கிழக்கின் நிலையைப் பொறுத்த வரையிலும், ஒரு சகாப்தத்தின் முடிவாக இந்நிகழ்வு பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வு சிரிய மக்களுக்கு மட்டுமன்றி, அந்தப் பிராந்தியத்திலும், முழுப் பன்னாட்டுச் சமூகத்திலும் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கணிக்கப்படுகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், மிகவும் செழுமையானதும் மிகப் பழமையானதுமான ஒரு கலாச்சாரத்தை சிரியா கொண்டிருப்பதே ஆகும்.



மிகப் புராதன பண்பாட்டைத் தன்னகத்தே கொண்டிருக்கும் சிரியா, கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கிறது. போர், அழிவுகள், பல மில்லியன்கள் எண்ணிக்கையில் நாட்டை விட்டு இடம்பெயர்ந்த மக்கள், உறுதியற்ற பொருண்மியம், மற்றும் பயங்கரவாதக் குழுக்களின் ஊடுருவல் என இந்தச் சவால்களை நிரற்படுத்தலாம். பூகோள ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் பல சக்திவாய்ந்த நாடுகளின் போர்க்களமாக சிரியா மாறியிருந்தது. உண்மையில் அஸாட்டின் பதவிவிலகல் ஒரு திருப்புமுனையாக அமைவதுடன், போர்ச்சக்கரத்தின் பிடியிலிருந்து விடுபட்டு, ஒரு புதிய எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கு அந்த நாட்டுக்குக் கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பாக இதனைக் கண்ணோக்கலாம்.

இந்த நிகழ்வுக்கு பல்வேறு வகையான வியாக்கியானங்கள் வழங்கப்படலாம். ஒரு சாராருக்கு நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தம் மற்றும் நல்லிணக்கத்துக்கு ஏற்ற ஒரு காலமாகப் பார்க்கப்படலாம். இன்னொரு சாராருக்கு இது ஓர் நிச்சயமற்ற எதிர்காலத்தைச் சுட்டிநிக்கலாம். கடைசியாக சிரிய நாட்டு மக்களும் அந்த நாட்டின் அரசியல்வாதிகளும், வரலாறு வழங்குகின்ற இந்த அரிய வாய்ப்பை எப்படிக் கையாளப்போகிறார்கள் என்பதைப் பொறுத்தே அந்த நாட்டின் எதிர்காலம் அமையப் போகின்றது. இது எவ்வாறிருப்பினும், பேச்சுவார்த்தைகள், சீர்திருத்தங்கள், சமூகத்தை ஒன்றிணைக்கக்கூடிய ஒரு புதிய அரசாட்சி மாதிரி (new governance model) என்பன தற்போது அவசியமாகத் தேவைப்படுகின்றன.

இங்கு ஒரு விடயம் மட்டும் உறுதியாக இருக்கிறது. சிரியாவின் மிகவும் செழுமையான வரலாற்றை யாரும் எந்த விதத்திலும் மறந்துவிட முடியாது. எமது கண்முன்னே நாம் பார்க்கும் மாற்றங்கள் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பமாக அமையலாம். கடந்த கால நிகழ்வுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, எதிர்காலத்தின் மீதுள்ள நம்பிக்கையினால் உந்தப்பட்டு, சிரியாவினால் உறுதித்தன்மையையும் செழிப்பையும் கண்டுகொள்ள முடியும்.

### மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஈரானுக்குப் பின்னடைவு

ஈரான் கொண்டிருக்கும் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தளவில், அஸாட்டின் பதவி விலகல் அதற்கு ஒரு மிக முக்கியமான பின்னடைவாகும். தெஹ்றானைப் பொறுத்த வரையில், எதிர்ப்பு அச்சைக் (resistance axis) கருத்தில் எடுக்கும்போது, சிரியா அதற்கான ஒரு முக்கியமான நாடாக இருந்தது. பல நட்பு நாடுகளின் வலைப்பின்னலும், கூட்டுச் சக்திகளும் இணைந்து மேற்கத்தைய நாடுகளின் செல்வாக்கைக் குறைத்து, மத்திய கிழக்கில், ஈரானது செல்வாக்கை அதிகரிக்க உதவியிருந்தன. இந்த மூலோபாயத்தை அதாவது, முழுப் பிராந்தியத்திலுமே தனது செல்வாக்கைச் செலுத்துதல் என்ற விடயத்தில் ஈரான் தற்போது பலவீனமான ஒரு நிலையை அடைந்திருக்கிறது.



பல தசாப்தங்களாக ஈரானின் மூலோபாய நட்புநாடாக சிரியா இருந்து வந்திருக்கிறது. ஆயுத விநியோகங்களுக்கான பாதையாகவும் அதே நேரம், லெபனானின் ஹிஸ்பொல்லாவுக்கு ஆதரவு வழங்கும் தளமாகவும் இருந்துவந்திருப்பது மட்டுமன்றி, மேற்கத்தைய நாடுகளுக்கு எதிராகவும் இஸ்ரேலுக்கு எதிராகவும் அணிதிரட்டுவதற்கான அரசியல் தளத்தையும் ஈரானுக்கு சிரியா வழங்கியிருந்தது. இராணுவ விநியோகங்களை மேற்கொண்டும், இராணுவ நிபுணர்களையும், ஷியா முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த படைகளையும் அங்கு அனுப்பியும், சிரியாவில் 2011ம் ஆண்டில் உள்நாட்டுப் போர் ஆரம்பமான காலத்திலிருந்து, பஷார் அஸாட்டுக்கான ஆதரவை வழங்குவதற்காக மிகவும் அதிகமான வளங்களை, சிரியாவில் ஈரான் முதலீடு செய்திருந்தது. எதிர்ப்பு அச்சைப் பொறுத்தவரையில் சிரியாவுடனான நட்பு ஈரானுக்கு முதுகெலும்பாக இருந்துவந்திருக்கிறது.



இவை எவ்வாறிருப்பினும், அஸாட்டின் பதவி விலகல், அதிகாரச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முதலாவதாக, மேற்கத்தைய நாடுகளுடனும், அத்துடன் ஏனைய அரபு நாடுகளுடனும், துருக்கியுடனும் உறவை வளர்த்துக்கொள்ளும் நோக்குடன், சிரியாவில் புதிதாக உருவாகியுள்ள அரசியல் கட்சிகள், ஈரானிலிருந்து தூர விலகிச்செல்லக்கூடும். இரண்டாவதாக அஸாட்டின் விலகல், தனது நட்பு நாடுகளின் உறுதித்தன்மையைப் பேண உதவும் நாடு என்ற விம்பத்தை தவிடுபொடியாக்கியுள்ளது. மேலும், சிரியாவில் ஈரானின் செல்வாக்கு பலவீனமடைந்தது குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஈரான் பேணிவந்த தானத்துக்கு ஆப்பு வைத்திருக்கிறது. சிரியாவின் ஆதரவில் ஈரான் அதிகமாகத் தங்கியிருந்தது. ஹிஸ்பொல்லா தற்போது பலவீனமான நிலைக்குச் சென்றிருக்கிறது. குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்கு முன்புபோல் இல்லை என்பதை அவதானிக்கும் இஸ்ரேலும், சிரியாவிலுள்ள ஈரானின் உட்கட்டமைப்பின் மேல் அழுத்தத்தைப் பிரயோகிக்கலாம்.

### நம்பிக்கைக்குரிய ஒரு நட்பு நாட்டின் இழப்பு

ஈரானைப் பொறுத்தவரையில், நம்பிக்கைக்குரிய ஒரு நட்பு நாட்டை இழப்பது என்பது, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அது அனுபவித்து வந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சிரிய களமுனையில் நகர்த்தப்பட்ட காய்கள்

வேல்ஸில் இருந்து

**அருஸ்**

சிரியாவில் இடம்பெற்ற திடீர் ஆட்சி மாற்றம் பலருக்கும் அதிர்ச்சி ஏற்படுத்தினாலும் 2021 ஆம் ஆண்டு அமெரிக்காவின் உதவியுடன் இயங்கிய ஆப்கானிஸ்தானின் அஸ்ரப் கானி அரசு தலிபான்களிடம் வீழ்ந்தது போன்றே சிரியாவும் 11 நாள் சமரில் வீழ்ந்துள்ளது. அதாவது தலிபான்கள் மேற்கொண்ட அதே போரியல் உத்திகள் தான் சிரியாவிலும் பயன்படுத்தப்பட்டது போன்றே உணரப்படுகின்றது.

நவம்பர் 27 ஆம் நாள் சிரியாவின் இலிப் பகுதியில் இருந்து துருக்கியின் ஆதரவு கொண்ட ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம்(எச்.ரி.எஸ்) என்ற அமைப்பும், சிரிய தேசிய இராணுவம்(எஸ்.என்.ஏ) என்ற அமைப்பும் ஆரம்பித்த தாக்குதல் சிரியாவின் மிகப்பெரும் விவசாய பிரதேசமான லெப்பொ பகுதியை சில தினங்களில் கைப்பற்றி, பின்னர் ஹமா பகுதி ஊடாக நகர்ந்து சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் பகுதிக்கு அண்மையான கோம்ஸ் நகரத்தை கடந்த வாரம் சனிக்கிழமை(7) அடைந்த போது சிரியா வீழ்ந்துவிட்டது என்ற எண்ணங்கள் பலரின் மனதிலும் எழுந்திருந்தன.



அதேசமயம், தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் இயங்கு நிலையில் இல்லாது இருந்த ஆயுதக்குழுக்களும் தாக்குதலை ஆரம்பித்ததால் கடந்த 13 வருடங்களாக உள்நாட்டு போரை சந்தித்துவந்த பசர் அல் அசாட்டின் அரசு வீழ்ந்தது. ரஸ்யா அவரை பாதுகாப்பாக தனது நாட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தது.

இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்ற கேள்விகள் பலரிடமும் உண்டு. ஆனால் அதற்கான காரணங்கள் பல, கடந்த பல வருடங்களாகவே அங்கு பொருளாதார நெருக்கடி, மனிதாபிமான நெருக்கடிகள் மிக அதிகமாகவே காணப்பட்டன. 90 விகிதமான சிரிய மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவந்தனர். சிறுவர்களும் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்பட்டனர். உணவுக்காக கடன் வாங்கியவர்கள் அதனை அடைக்கமுடியாது திணறினர். தலைநகரில் கூட 20 மணிநேர மின்சாரத்தடை இருந்தது. இந்த வருடத்தின் நடுப்பகுதியில் மின்சாரக்கட்டணம் 585 விகிதமாக உயர்ந்திருந்தது.

கடந்த13 வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப்போரில் ஏறத்தாழ 500,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1.4 மில்லியன் மக்கள் நாட்டைவிட்டு தப்பியோடியுள்ளனர். சிரியாவின் தற்போதைய சனத்தொகையும் 20 மில்லியனாக குறைந்துள்ளது.



சிரியாவின் எண்ணெய் வயல்களை குருதிஸ் படையினரின் துணையுடன் அமெரிக்கா ஆக்கிரமித்தது, பொருளாதாரத் தடைகள் வெளிநாட்டு கடன்களை தடுத்தது. வர்த்தகம் செய்வதற்கு சிரியாவிடம் எதுவும் இருக்கவில்லை. இராணுவத்தினரின் ஒரு மாதச் சம்பளம் வெறும் 7 டொலர்கள் மட்டும் தான், ஜெனரல் தர அதிகாரிகள் கூட 40 டொலர்களை தான் ஊதியமாகப் பெற்றனர்.

எனவே தான் 170,000 இராணுவத்தினரும் சமரை எதிர்கொள்ள முடியாத மனவலிமை குன்றிய நிலையில் ஆயுதங்களைக் கைவிட்டு தப்பியோட நேர்ந்தது.




உலகின் இரு துருவங்களாக மாற்றம் பெற்றுள்ள சமநிலையை பேணுவதற்காக ரஸ்யாவும் இந்த தடவை தனக்கு சாதகமற்ற களமுனைகளில் அதிக கவனம் செலுத்த முற்படவில்லை. எனவே தான் 2015 ஆம் ஆண்டு அசாத்தை காப்பாற்றியது போல இந்த முறை அது களமிறங்கவில்லை. அதாவது சிரிய சமரை அது பிறிதொரு நாளுக்கு ஒத்திவைத்துள்ளது. எனினும் அதிபரைக் காப்பாற்ற அது தவறவில்லை. ஹிஸ்புல்லாக்களும், இஸ்ரேலுடனான மோதலில் கவனத்தை குவித்துள்ளதால் சிரியாவை பொருட்படுத்தவில்லை.

ஈரானுடன் தொடர்புகளை பேணினால் இஸ்ரேலின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்பதால் ஈரான் உதவி வழங்க முன்வந்தபோதும் சிரியா அதனை மறுத்திருந்தது.

சிரியாவின் இலிப் பகுதியில் அசாதாரணமான நடமாட்டங்கள் காணப்படுவதாகவும், அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் ஈரான் மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் சிரியாவை 3 மாதங்களுக்கு முன்னர் எச்சரித்ததாக ஈரானின் ஜெனரல் Amir Hussein Haji Nasiri தெரிவித்துள்ளார். ஆனால் சிரிய அதிபர் அதனை புறம்தள்ளியதுடன், யாரையும் நம்ப மறுத்ததே தற்போதைய நிலைக்கு காரணம் என ஈரான் தெரிவித்துள்ளது.

தற்போது சிரியா வீழ்ந்துள்ளது, இந்த நிலையில் தலிபான்கள் பாணியில் சிரியாவை கைப்பற்றலாம் என நினைக்கின்றது எச்.ரி.எஸ். ஆனால் சிரியா ஆப்கானிஸ்தான் அல்ல என்பதே உண்மையானது. ஏனெனில் சிரியா மிகவும் சிக்கலான இனப்பிரிவுளைக் கொண்ட தேசம். அவர்களுக்கு இடையில் நீண்டநாள் முறுகல்களும் உள்ளன. எஸ்.என்.ஏ மற்றும் எச்.ரி.எஸ் என்பன இலிப் பகுதியை தளமாகக் கொண்ட துருக்கியின் ஆதரவு கொண்ட படையினர்.

வடகிழக்கில் மற்றும் அலவைரிஸ் கரை பகுதிகளில்அமெரிக்காவின் அனுசரணையுடன் இயங்கும் குருதிஸ் அமைப்பினர் பலமாக உள்ளனர். றூஸ் என்ற பிரிவினர் தெற்கிலும், அமெரிக்காவின் ஆதரவுடன் இயங்கும் பல குழுக்கள் தென்கிழக்கிலும் உள்ளன. பாலைவனப் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தற்போதும் இயங்கி வருகின்றது.



அதாவது லிபியாவில் கேணல் கடாபியின் வீழ்ச்சியை தொடர்ந்து மேற்குலகத்தால் அமைக்கப்பட்ட அரசை தூக்கி எறிந்து அங்கு பல பிரிவுகளை படைத்துறையை சேர்ந்த பல கட்டளை அதிகாரிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்த கட்டளை அதிகாரிகளை பல வல்லரசு நாடுகள் வழிநடத்தி வருகின்றன. அமெரிக்காவும், ரஷ்யாவின், பிராந்திய அரபு நாடுகளும் அங்குள்ள கட்டளை தளபதிகளை வழிநடத்துகின்றன. லிபியாவில் உள்ள தனது ஆளுமையை பேணுவதற்காகவே சிரியாவில் ரஸ்யா தனது கடற்படை மற்றும் வான்படைத்தளத்தை அமைத்து பேணி வருகின்றது.

2015 ஆம் ஆண்டு சிரியைவை காப்பாற்றிய பின்னர். சிரியாவில் தனது கடற்படைத்தளத்தை நிறுவும் 50 வருட உடன்படிக்கை ஒன்றை ரஸ்யா ஏற்படுத்தியிருந்தது. அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் 12 போர்க் கப்பல்களை அங்கு ரஸ்யா வைத்திருக்க முடியும். அந்த முகாம் தற்போதும் உள்ளது. சிரியாவில் ஆட்சி மாறியபோதும் ரஸ்யா வின் படைத்தளத்தில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. Khmeimim வான்படைத்தளமானது ரஸ்யாவின் அணுக்குண்டுகளை வீசும் Tu-22M3 விமானங்கள், அதிவேக இடைமறித்து தாக்குதல் நடத்தும் MiG-31K/I விமானங்கள் மற்றும் பலிஸ்ரிக் ஏவு கணைகளைக் கொண்ட தளமாகும்.



மேலும் துருக்கியின் ஆதரவு கொண்ட படையினர் ரஸ்யாவை எதிர்ப்பதை துருக்கி விரும்பாது. சிரியா வீழ்வதற்கு முன்னர் துருக்கி, ஈரான், சிரியா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## பவளவிழா ... தொடர்ச்சி ...

சேர்ந்தவர்களான திருகோணமல் சந்திரசேகரம் திருகோணமலையிலும், முல்லைத்தீவை சேர்ந்த பீற்றர் இளம்செழியன் யாழ்ப்பாண நீதிமன்றிலும் மகாநாடு தொடர்பாக இரண்டு வழக்குகள் கடந்த 2023, பெப்ரவரி, 15ல் தாக்கல் செய்யப்பட்டதால் மகாநாடு நடத்தப்படவில்லை ஒரு வருடமாக வழக்கு நிறைவுக்கு வரவில்லை.

இதேவேளை இன்னுமொரு வழக்கை மட்டக்களப்பு முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மார்கண்டு நடராசாவாலும் யாழ் நீதிமன்றில் கடந்த 2024,அக்டோபர்,10ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மூன்று வழக்குகள் முற்றுப்பெறாத நிலையில் தமிழரசுக்கட்சியின் 17,வது மாகாநாடு நடத்தப்படாமை ஒரு புறமும் 2024, டிசம்பர், 18ல் பவள விழாவை நடத்த முடியாத இக்கட்டான நிலைமையும் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு காரணமாக புதிய தலைவராக தெரிவான சிறிதரன் பதவி ஏற்கவில்லை, பழைய தலைவரான மாவை சேனாதிராசா தொடர்ந்தும் தலைவராக பெயர் அளவில் உள்ளார்.

தமிழரசுக்கட்சியானது தனித்து 1949 தொடக்கம் 1972, வரை. 23 வருடங்கள் மட்டும் ஆரம்பத்தில் செயல்பட்டது. பின்னர் 1972 ல் தமிழர் கூட்டணி என ஆரம்பித்து அது 1976, மே,14ல் வட்டுக்கோட்டை தமிழீழ தனியரசு தீர்மானம் தந்தை செல்வாவால் எடுக்கப்பட்டபோது தமிழரசுக்கட்சி மேலும் ஒரு கட்சியாக தமிழர் விடுதலைக்கூட்டணி உருவானது.

இந்த காலத்தில் நடந்த தேர்தல்கள் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் 2001,வரை சுமார் 29, வருடங்கள் போட்டியிட்ட வரலாறே உண்டு. இந்த காலக்கட்டத்தில் ஈழவிடுதலைப்போராட்டம் ஆயுத போராட்டமாக மாறியது அதில் போராடிய 36, விடுதலை ஆயுத இயக்கங்கள் 1987,யூலை,29ல், இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் போராட்டத்தை விட்டு ஒதுங்கினர், சிலர் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தேர்தல் அரசியலில் முகம்கொடுத்தனர்.

2001,அக்டோபர்,20 தொடக்கம் 2023, ஜனவரி,21 உள்ளூராட்சி தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்யும் வரை தமிழ்தேசிய கூட்டமைப் பாக தமிழரசுகட்சி வீட்டுச்சின்னத்தில் களம் இறங்கிய கட்சிகள் கடந்த 2023, ஜனவரியில் இடம்பெறவிருந்த உள்ளூராட்சி சபை தேர் தல் கலப்பு முறை தேர்தல் காரணமாக ஏற் பட்ட முரண்பாட்டால் தமிழரசுக்கட்சி வீட்டுச் சின்னத்தில் இருந்து ரெலோ, புளோட், விலகி ஈபிஆர்எல்எவ், மற்றும் ஜன நாயக போராளிகள், என சில சில்லறை கட்சிகளை சேர்த்து புளட் இயக்கத் தின் பங்காளி கட்சியான ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணி என்ற கட்சியின் “குத்து விளக்கு” சின்னத்தில் தனியாக வேட்பு தாக்கல் செய்தனர்.

தமிழரசுக்கட்சியும் தனியாக “வீடு” சின்னத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தனர் ஆனால் அந்த தேர்தல் இதுவரை இடம்பெற வில்லை என்பது ஒருபுறம் இருக்க... கடந்த 2024, செப்டம்பர், 21ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பொதுவேட்பாளராக 83, சிவில் அமைப்புகள், 07 தமிழ்தேசிய கட்சிகள், பல புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும் தமிழ்த் தேசியவாதியுமான பா.அரிய நேத்திரனை பொது வேட்பாளராக சங்கு சின்னத்தில் நிறுத்தியபோது தமிழரசுக்கட்சி மத்தியகுழுவில் ஒருசாரார் அதனை எதிர்த்து சஜீத் பிரமதாசாவின் வரப்பிரசாரங்களைப்பெற்று அவரை ஆதரித்தனர். ஆனால் தமிழரசுகட்சி மத்தியகுழுவில் உள்ள தலைவரான மாவை சேனாதிராசா, புதிதாக தலைவராக தெரிவான சிறிதரன், ஸ்ரீநேசன், யோகேஷ்வரன், திருமலை மாவட்ட தலைவர் குகதாசன், அம்பாறை கோடீஷ்வரன், மன்னார் சாள்ஷ்நிர்மலநாதன், கொழும்புக்கிளை தலைவர் தவராசா, உட்பட பல பிரதேச மாவட்ட தொகுதி கிளை உறுப்பினர்கள் அரியநேத்திரனுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தனர்.

ஏழு தமிழ்த்தேசிய கட்சிகள், 83, பொது அமைப்புகள், முன்னாள் போராளிகள், புலம்பெயர் தமிழ் உறவுகள், அமைப்புகள் எல்லோரின் பிரசாரத்தால் 226322, வாக்குகளை அரியநேத்திரன் பெற்று இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ்த்தேசிய கொள்கை உறுதியினை நிருபித்தார்.

குறிப்பாக வடமகாணத்தில் மட்டும் கிழக்கு மாகாணத்தை விட 119000 வாக்குகள் கிடைத்தது. இலங்கை வரலாற்றில் ஒரு தமிழன் ஐந்தாவது இடத்தை ஜனாதிபதி தேர்தலில் பெற்றார் என்பது இதுவே முதல்தடவை. ஆனால் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு பூரண ஆதரவை கொடுத்த யாழ்ப்பாண மாவட்ட தமிழ்மக்கள் ஏன் ஜனாதிபதி அநுராவின் “தேசிய மக்கள் சக்திக்கு” மூன்று ஆசனங்களை பெற வாக்களித்தனர் என்ற வினா பலரின் மத்தியில் இருந்தது. இதற்கான காரணமும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சிமீது மக்கள் கொண்ட அதிருப்தியும், தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது கொண்ட வெறுப்பும் என்பதே உண்மை. அதேவேளை 2024,நவம்பர்,14ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரின் “சங்கு” சின்னத்தை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தமது “குத்து விளக்கு” சின்னத்தை மாற்றிவிட்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்ட போது வன்னியில் மட்டும் ஒரு ஆசனம் கிடைத்தது ஏனைய சகல மாவட்டங்களிலும் படு தோல்வியடைந்தனர் மக்கள் சின்னங்களை விட எண்ணங்களிலேயே குறியாக இருந்தனர். அதனால் பல போராட்ட அமைப்புகளின் கிழக்கு மாகாணத்தை விட எல்லோருடனும் ஏனைய அரச கைக்கூலிகளான டக்லஷ், அங்கயன், கருணா, பிள்ளையான், போன்றவர்களை முழுமையாக தோறகடித்தனர்.

இது தமிழ்தேசிய அரசியலுக்கு எழுச் சியை கொடுத்தது, தமிழரசுக்கட்சியில் யாழ்மாவட் டத்தில் சிறிதரன் மட்டுமே கிளிநொச்சி மாவட்டத்து உணர்வுள்ள தமிழ்மக்களால் தமிழரசுக்கட்சியில் ஒரு ஆசனத்தை பெற முடிந்தது. வன்னி மாவட்டத்தில் ஒரு ஆசனமும், கிழக்கில் வழமை போன்று ஐந்து ஆசனங்கள் பெறப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தேசிய மக்கள் சக்தி தோல்விகண்டது.

மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை மட்டுமல்ல தொடர்ந்தும் 1989, தொடக்கம்2024, வரை ஒன்பது பொதுத்தேர்தல்களிலும் எந்த ஒரு பேரினவாதக்கட்சிகளும் முதன் நிலை பெறவில்லை. அந்த வரலாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்களிடம் தமிழ்தேசிய உணர்வு தொடர்கிறது. யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் தமிழ்தேசிய கொள்கைக்காக வாக்களிக்கும் பாரம்பரியம் தமிழ்த்தேசிய உணர்வு 1977, தொடக்கம் 2024, வரை 46, வருடங்களாக மட்டக்களப்பு தமிழ்மக்களிடம் உள்ளது. 75, வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த தமிழரசுக்கட்சி இந்த பவள விழா ஆண்டில் (2024) எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்று இலங்கை நாடாளுமன்றில் மூன்றாவது பெரும்பான்மை கட்சியாக இருப்பது மகிழ்ச்சியான விடயமாக காணப்பட்டாலும் பவள விழாவை கொண்டாட முடியாத முட்டுக்கட்டையாக வழக்கு ஒருபுறம் யார் தலைவர் என்ற கேள்வி மறுபுறம், என்ற நிலைமையுடன் மௌனமாகவே பவள விழாவில் தமிழரசுக்கட்சி கடந்து செல்லும், ஆனால் இந்த தேர்தல் முடிவுகள் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது. அதாவது தேசிய தலைவரின் சிந்தனையில் உருவான தமிழ்தேசிய கூட்டமைப்பு அவரால் ஆணையிடப்பட்ட இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற செய்தி ஏனைய தமிழ் கட்சிகளுக்கு இந்த தேர்தல் முடிவுகள் சொல்லப்பட்டுள்ளது. ஒரு குரலால் தமிழர்களுக்கான தீர்வை வலியுறுத்த எதிர்வரும் 2025, ம் ஆண்டில் தமிழ்தேசிய அரசியலில் அனைவரும் ஒன்றாக பயணிப்பதே காலத்தின் தேவை.இல்லை எனில் தமிழ்தேசிய அரசியல் பரிதாபமாகவே கடக்கும்.

• • •

## சிரிய களமுனை ... தொடர்ச்சி ...

அவசரமான ஒரு மாநாட்டை நடத்தியிருந்தன. அந்த மாநாடு என்பது சிரியாவை காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட மாநாடு என்றே பலரும் கருதியிருந்தனர். ஆனால் அந்த மாநாட்டில் பேசிய ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர், தனது அதிகாரத்தை மோதல்கள் இன்றி எச். ரி.எஸிடம் அசாட் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையே முன்வைத்திருந்தார். சிரிய அதிபரை பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டத்தையும் வகுத்திருந்தனர்.

சிரியாவின் விரைவான வீழ்ச்சியை அமெரிக்காவும் எதிர்பார்க்கவில்லை மறுவளமாக லெப்போ பகுதியை தாண்டி எச்.ரி.எஸ் முன்நகரும் என துருக்கியும் நினைக்கவில்லை. தற்போது நிலமை யார் கையிலும் இல்லை. அமெரிக்க ஜெனரல் கிழக்கு சிரியாவில் உள்ள குருதிஸ் படையினரை சந்திக்க அவசரமாக ஓடுகின்றார். இஸ்ரேல் அவசரமாக சிரியாவின் கனரக ஆயுதங்களை அழிப்பதில் கவனம் செலுத்துகின்றது. அதாவது துருக்கி போட்ட திட்டத்தை ரஸ்யா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டதா என்ற கேள்விகளும் எழாமல் இல்லை. சிரியாவின் வீழ்ச்சி என்பது சிரியாவுக்கான வீழ்ச்சியல்ல ஒட்டுமொத்த மத்திய கிழக்கு பிராந்தியத்தையும் மீளமுடியாத பொறிக்குள் தள்ளியுள்ளது. சிரிய அகதிகள் மற்றும் அகதிகள் என்ற போர்வையில் அல்கைடா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினரும் ஐரோப்பிய நாடுக ளுக்குள் ஊடுருவலாம் என்ற அச்சம் காரணமாக ஐரோப்பிய நாடுகள் சிரிய அகதிகளுக்கான அனு மதிகளை அவசரமாக மூடியுள்ளன.

சதுரங்க ஆட்டத்தில் சில சமயங்களில் நாம் நகர்த்தும் காய்கள் எமக்கு எதிராக மாறி விடுவதுண்டு அதனை தான் சிரியாவின் களமுனை எதிர்காலத்தில் உணர்த்தப்போகின்றது போல.

• • •

## வர்த்தகப்போரில் ... தொடர்ச்சி ...

பரந்த அளவிலான இணக்கப்பாடுகள், பேச்சுக்கள், மற்றும் முகாமைத்துவ உறவு களை வொசிங்டனுடன் சீனா பேண விரும்பு கின்றது. அமெரிக்காவும் அதனையே எம்மு டன் மேற்கொள்ளவேண்டும் என நாம் விரும்பு கின்றோம். வரி மோதல்கள், தொழில்நுட்ப போட்டிகள், பொருளாதார போர் என்பன வர்த்தக விதிகள் மற்றும் அதன் வரலாறுகளுக்கு எதிரான போர் ஆகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சியை அமெரிக்கா தடுக்க நினைத்தால் அதுதான் இறுதியான எல்லைக்கோடு. அமெரிக்காவின் பொருளாதாரப் போருக்கு சீனா பதிலடி வழங்கத் தயங்காது என கடந்த மாதம் சீன அதிபர் அமெரிக்காவை எச்சரித்திருந்தார்.

இந்த மாதம் சீனாவுக்கு மென்கடத்திகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் மற்றும் அதற்கான மென்பொருட்களுக்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது. அதற்கு பதிலடியாக மென் கடத்திகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதை சீனா தடை செய்திருந்தது.

## அஸாட்டின் பதவி ... தொடர்ச்சி ...

செல்வாக்கை கணிசமான அளவு பாதித்திருக்கிறது. இதன் காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டி, உறுதியை ஏற்படுத்தும் நாடாக இல்லாமல், அதற்கு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும் ஒரு நாடாக, ஈரானைப் பார்க்கின்ற பல அயல்நாடுகளுடன் அதன் உறவு மோசமடைவதற்கான வாய்ப்புகள் தற்போது அதிகமாகவே இருக்கின்றன.

சிரியாவில் அஸாட்டின் அரசுக்கு எதிரான தாக்குதல்கள் அண்மையில் அதிகரிக்கப்பட்ட போது, கடந்த சில நாட்களாக ஈரானைச் சேர்ந்த அதிகாரிகள் சிரியாவின் நிலைமை தொடர்பாக பல தடவை தமது கருத்துகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். மிகவும் குறிப்பாக உக்ரேன் நாட்டின் மேல் அந்த அதிகாரிகள் முக்கிய குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கின்றனர். ஆளில்லா விமானங்களை எதிர்த்தரப்பிலுள்ள ஆயுதக்குழுக்களுக்கு வழங்கி, சிரியாவிலுள்ள அந்த எதித்தரப்பு ஆயுதக்குழுக்களுக்கு உக்ரேன் ஆதரவை அளித்து வந்திருக்கிறது என்று இஸ்லாமிய ஆலோசனைப் பேரவையின் தேசிய பாதுகாப்பு மற்றும் கொள்கைகளுக்கான குழுவின் பேச்சாளரான இப்ராஹீம் றெஸாயெய் *(Ibrahim Rezaei)* குற்றஞ்சாட்டியிருக்கிறார். உக்ரேனால் வழங்கப்பட்ட ஆளில்லா விமானங்களின் காரணமாக சிரியாவிலுள்ள பயங்கரவாதிகளிடம் பலமான ஆயுதங்கள் தற்போது இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையை உருவாக்கியதற்காக உக்ரேன் அரசு பொறுப்புக்கூற வேண்டும் என்று றெஸாயெய் வலியுறுத்தினார். இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக உக்ரேன் இதுவரை எந்தவிதமான பதிலும் தெரிவிக்கவில்லை. ஆனால், உக்ரேனின் அதிபர் விளாடிமீர் ஸெலென்ஸ்க்குச் சார்பான உக்ரேன் ஊடகங்கள் சில, ஈரானுக்கு எதிரான கருத்துகளை தமது ஊடகங்களில் பதிவுசெய்ததை வைத்து நோக்கும் போது, ஈரான் முன்வைக்கும் இக்குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கலாம் என அறியமுடிகிறது.

ஹயாற் தாஹ்றீர் அல்-ஷாம் என்ற ஜிகாத் குழுவினருடன் *(Hayat Tahrir al-Sham)* உக்ரேனின் பிரதான புலனாய்வுத் தலைமையகம் தொடர்புகளை ஏற்படுத்தியதாக துருக்கியிலுள்ள முக்கிய ஊடகங்கள் செப்ரெம்பர் மாதத்தில் தகவல் வெளியிட்டிருந்தன. அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒரு குழுவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள உக்ரேன் விரும்புவது தொடர்பாக அந்த ஊடகங்கள் தமது வியப்பை கோடிட்டுக்காட்டியிருந்தன. இவ்வாறான ஒரு குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்காக உக்ரேனின் புலனாய்வுத் தலைமையகத்தின் அதிகாரி ஒருவர் மேற்குறிப்பிட்ட பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்த ஒருவருடன் உரையாடும் ஒளிப்படத்தை தமது ஊடகங்களில் வெளியிட்டிருந்தன.

துருக்கியைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் முன்னெடுத்த ஓர் உயர்மட்ட ஆய்வில், உக்ரேன் புலனாய்வுத் தலைமையகத்தின் பிரதிநிதிகளுக்கும் துருக்கியில் உள்ள ஹயாற் தாஹ்றீர் அல்-ஷாம் என்ற ஜிகாத் குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையே பல்வேறு சந்திப்புகள் நடைபெற்றிருந்ததற்கான சான்றுகளைப் பெற்றிருந்தன.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், கடந்த பல மாதங்களாக இவ்வாறான சந்திப்புகள் துருக்கியில், சிரிய எல்லைக்கு அருகில் நடைபெற்றதாக அறியக்கிடக்கின்றது.

குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஈரானுக்கு இருந்த செல்வாக்கை இல்லாதொழித்து, அஸாட்டின் படைகளுக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரிப்பது தொடர்பாக இரு சாராருக்கும் இருந்த ஆர்வம் தொடர்பாக இவ்வாறான சந்திப்புகள் நடைபெற்றிருக்கலாம் என ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினார்கள். துருக்கி, ரஷ்யா உள்ளிட்ட இன்னும் பல நாடுகளினால் பயங்கரவாத அமைப்பு என பட்டியலிடப்பட்ட ஹயாற் தாஹ்றீர் அல்-ஷாம் என்ற ஜிகாத் குழுவின் ஈடுபாடு, துருக்கியில் வாழும் பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

கண்கண்ட சாட்சிகள், சந்திப்புகளுக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விபரங்கள், பங்குபற்றியவர்கள் குறித்த இடங்களுக்குச் சென்ற பாதைகளை; போன்ற தரவுகளை வைத்தே குறிப்பிட்ட அமைப்பின் செயற்பாடு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமானால், துருக்கிக்கும் உக்ரேனுக்கும் இடையேயுள்ள இரு தரப்பு உறவில் விரிசல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று இவ்விடயத்தை ஆய்வுசெய்தவர்கள் தெரிவிக்கிறார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உக்ரேன் உத்தியோகபூர்வமாக எந்தவிதமான பதிலையும் இதுவரை வெளியிடவில்லை என்பதுடன் துருக்கியிலுள்ள பொதுமக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் இவ்வாறான செய்திகள் எதிர்மறையான அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இவ்வாறான கட்டுரைகள் ஊடகங்களில் வெளிவந்த சில நாட்களின் பின்னர் அவ்வாறான ஆக்கங்கள் அக்குறிப்பிட்ட ஊடகங்களிலிருந்து அகற்றப்பட்டன என்பன இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**நன்றி: *rt.com***

## மனித உரிமை ... தொடர்ச்சி ...

வதற்கான ஏற்பாடுகளாக அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பு யாப்பில் பொறித்தல், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி, பொலிஸ், ஐக்கிய நாடுகள் சபையின் துணை தாபனங்கள், அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், வெகுஜன ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள், பகிரங்க ஆணைக்குழுக்கள் என்பன காணப்படுகின்றன.

எனினும், சமூகப்பல்லினத்தன்மை கொண்ட நாடுகளில் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதில் முரண்பட்ட நிலையில் எதிர்மறையான பிரதிபலிப்பினைக் காண முடிகிறது. கடந்த கால விளைவுகளின் படி அரசாங்கத்தின் நிர்வாகச் சிக்கல்கள், இன, மத, சாதி ரீதியாக பிளவுபட்ட அரசியற்கட்சிகளின் செயற்பாடுகள் மற்றும் அரசியல்வாதிகளின் பிற்போக்கான செயற்பாடுகள், உப சட்டங்கள், யாப்புத் திருத்தங்கள் என்பன மனித உரிமைகளையும், அதனுடன் இணைந்த மனித பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

அதனை விட இலங்கையில் பயங்கரவாதச்சட்டம், அவசரகாலச்சட்டம்*(1979)* பொது மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு தடையாக உள்ளன.

எனவே மனித உரிமைகள் தொடர்பிலான விழிப்புணர்வு வலுப்பெற வேண்டியது காலத்தின் தேவையாகும். எனவே, இவ்வுலகில் பிறந்த அனைவரும் சமனானவர்கள்.

• • •

## டில்லி பயண ... தொடர்ச்சி ...

முதலாவதாக உள்ளது. இதற்காக இந்திய முதலீடுகளை இலங்கை பெருமளவுக்கு எதிர்பார்க்கின்றது. அவை தொடர்பாகவே ஜனாதிபதியின் கவனம் குவிந்திருக்கும் என்றும் எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் டில்லி அக்கறையாக இருக்கும் அதேவேளையில், வளர்ந்துவரும் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு என்பதுதான் அவர்களுடைய முக்கியமான பிரச்சினை. குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகள் சீனாவின் ஆதிக்கத்துக்குள் செல்வதை இந்தியா விரும்பாது.

இந்தப் பகுதிகளில் தமிழர்களுடைய கட்டுப்பாட்டில் பலமான ஒரு மாகாண சபை அதிகாரத்தில் இருப்பது தமக்கு சாதகமாக இருக்கும் என்பது டில்லியின் கருத்து. கொழும்பில் தமக்கு சார்ப்பாக செயற்பட விரும்பாத அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கும் நிலையில், வடக்கு - கிழக்கில் தாம் சொல்வதைக் கேட்கக்கூடிய நிர்வாகம் ஒன்று இருப்பதன் அவசியத்தை இந்தியா உணர்கிறது. இதற்காக, ஒன்று 13 ஆவது திருத்தம் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதையும், மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதையும் இந்தியா எதிர்பார்க்கலாம்.

மாகாண சபைகள், 13 ஆவது திருத்தம் என்பவை இந்தியாவுக்கு முக்கியமானவை. அவை தொடர்பாக நட்புறவு அடிப்படையில் சில விடயங்களை அநுரவுக்கு இந்திரத் தரப்பு தெரியப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில், உடனடியான சில பொருளாதார மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உதவி களை வழங்குவதற்கு இந்தியா முன்வரும். அதன் மூலம் அநுரவை தம்முடன் வைத்திருப்பதற்கு இந்தியத் தரப்பு முற்படும். இரு தரப்பினரும் தங்களுடைய நலன்களை இலக்காகக் கொண்டுதான் காய்களை நகர்த்துவார்கள்.

• • •

## கிழக்கு மாகாண ... தொடர்ச்சி ...

வைக்கப் படுகின்றன. அதேபோல வெளிநாட்டு விடுமுறை அனுமதியிலும் பாரபட்சம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இதன் உண்மைத் தன்மைகளை அறியும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

## இந்திய அரசின் ... தொடர்ச்சி ...

தெரிவித்திருந்தாலும் நடைமுறையில் எவ்வித மாற்றமும் இல்லாத போக்கே நிலவுகிறது. ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் நாடுகடத்தலுக்கு போன்ற ஆபத்துகளையும் பல விதமான சந்தேக கைதுகளையும் இந்தியாவில் சந்தித்து வருகின்றனர். ஆனால், இன்றைய நிலையில் இலங்கை தமிழ் அகதிகளுக்கு அவ்வாறான அச்சுறுத்தல் இல்லை என்பது ஒரே ஆறுதல்.

மேற்குலக கண்கொண்டு இந்தியாவில் அகதிகளை அணுகுவது சாத்தியமற்றது, ஏனெனில் அகதிகள் சாசனத்தை கையெழுத்திடாத நாடாக இந்தியா இருக்கிறது. அந்த வகையில், இந்தியாவை சார்ந்திருக்க எண்ணும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான தீர்வு என்பது இந்திய அரசின் எண்ணத்தில் இருக்கிறது. அந்த எண்ண மாற்றத்தையே இந்திய குடியுரிமையைக் கோரும் இலங்கைத் தமிழ் அகதிகள் வேண்டுகின்றனர்.

• • •

## ஈழத்தமிழ் ... தொடர்ச்சி ...

உரிமையின் அடிப்படையில் நெறிப்படுத்தியிருக்கிறது.

சாராம்சத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாடு, ஐ.நா. ஐ.நா. பிரகடனங்களுக்கும். சர்வதேசச் சட்ட நியமங்களுக்கும் இசைவாக கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

எமது நியாயமான விடுதலைப் போராட்டத்திற்குச் சர்வதேசச் சமூகத்தின் அங்கீகாரத்தை நாம் பெறுவதாயின், ஐ.நா. சாசனங்களுக்கு இசைவாக எமது போராட்டப் பாதையை நெறிப்படுத்துவது சாலச் சிறந்தது.

**நன்றி:**

அன்ரன் பாலசிங்கம் அவர்களின் போரும் சமாதானமும் நூலில் இருந்து...

## அபிவிருத்திக்கு ... தொடர்ச்சி ...

எவ்விதமான பலனும் இது வரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் நிலைமையே காணப்படுகின்றது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றுவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத் திட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வைக்கும் என்றும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் மாகாண சபை முறையை நீக்கக் கூடாதென்ற கருத்துக்களும் வலுப்பெற்று வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மாகாண சபையை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப்பகிர்வை நீக்குவதற்கு முயற்சிக்கப் படுமாயின், அது தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் செயல் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். மாகாண சபை முறை மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. உரிமை சார்ந்த விடயங்கள் என்பதைக் காட்டிலும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்கு ஒரு உந்துசக்தியாக மாகாண சபை முறை அமைந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்த வகையில் குறிப்பாக மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் அபிவிருத்திக்கு சற்று அதிகமாகவே இம்முறை வாய்ப்பளித்திருப்பதாக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா. ரமேஷ் குறிப்பிடுகின்றார்.

### பௌதிகவள தேவைப்பாடு

மலையக சமூகம் கல்விமையச் சமூகமாக மேலெழும்ப வேண்டிய ஒரு தேவைப்பாடு காணப்படுகின்றது. இதன் மூலம் இச்சமூகத்தின் பல்வேறு கனவுகளும் நனவாகும் வாய்ப்புள்ளது என்பதோடு தேசிய நீரோட்டத்தில் இம்மக்கள் துரிதமாக இணைந்து கொள்வதற்கும் அது வலுசேர்ப்பதாக அமையும். இந்த வகையில் மாகாண சபை முறையின் ஊடாக மலையக பாடசாலைகள் புதுமெருகு பெற்றன என்பதே உண்மையாகும். ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் எம்மவர்கள் கல்வியமைச்சர்களாக நியமிக்கப்பட்ட நிலையில் இது பல சாதக விளைவுகளுக்கும் அடித்தளமிட்டது. பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆசிரியர் நியமனங்கள் அவ்வப்போது பெற்றுக் கொடுக்கப்பட்டன. பாடசாலைகளின்பௌதிகவளதேவைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்ட நிலையில் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களை சேர்ந்த பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு கல்வி மேம்பாட்டிற்கு அடித்தளமிடப்பட்டது. பாடசாலைகளுக்குத் தேவையான கற்பித்தல் உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதிலும், ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதிலும் மாகாண அமைச்சுக்கள் முன்நின்றன. இத்தகைய செயற்பாடுகளால் மலையகத்தின் கல்விப் பெறுபேறுகள் கணிசமாக அதிகரித்தன.

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற சாகித்திய விழாக்கள் மலையக மக்களின் கலை கலாசார பாரம்பரியங்களை பேணுவதற்கு அத்திவாரமிட்டன. இலைமறை காயாக இருந்த கலைஞர்கள் பலர் வெளிக்கொணரப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும். கலைகள் நீடித்து வாழ்வதற்கு மாகாண சபைகள் கணிசமான பங்காற்றி இருந்தன. உட்கட்டமைப்பு வசதிகளில் மலையகத்தில் முன்னேற்றத்தைக் காண முடிந்தது. வைத்தியசாலைகளும் ஓரளவு அபிவிருத்தி கண்டதுடன் வேலை வாய்ப்புகளும் கிடைத்தன. சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. பெருந்தோட்டப்புறங்களின் ஆலய அபிவிருத்திக்கு மாகாண சபைகள் பங்களிப்பு செய்தன. மலையக சமூகத்தைச் சேர்ந்த பலர் அரசியலில் ஆதிக்கம் செலுத்தினர். மலையக அபிவிருத்திக்கு இதுவும் வாய்ப்பாக அமைந்தது.

### இடர்களைக் களைதல்

மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து காணப்படுகின்ற நிலையில் மாகாண அரசின் அதிகாரங்களில் போதாத்தன்மை காணப்படுகின்றது. இந்நிலையில் 13 ஆவது திருத்தத்திற்கேற்ப பூரணமான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். அத்தோடு போதுமான நிதியினை மாகாண சபைகள் பெற்றுக் கொள்வதிலும் இடர்பாடு காணப்படுகின்றது. இந்த இடர்பாடுகள் களையப்பட்டு போதுமான நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் மாகாண சபைகளை சக்திப் படுத்துவதாக அமையும். இதேவேளைதேசியஅரசின்வேலைத்திட்டங்கள் முழுமையாக மக்களை சென்றடையும் வாய்ப்பு குறைவாகவுள்ளது. இந்நிலையில் மாகாண சபைகள் மிகவும் அவசியமாக தேவைப்படும் நிலையில் மக்கள் மாகாண சபைகளின் ஊடாக நன்மைகள் பலவற்றையும் பெற்றுக் கொள்ளவும் வழியேற்படும்.

இதனிடையே இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் காணப்படுகின்ற மாகாண சபை முறைமையானது புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் வரை செயற்பாட்டில் இருக்குமென்றும், தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசியலமைப்பு 3 ஆண்டுகளுக்குள் மக்கள் அனுமதிக்காக முன்வைக்கப்படும் என்றும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. எவ்வாறெனினும் மாகாண சபை முறை இல்லாதொழிக்கப்படாது ,இம் முறைக்கு வலுசேர்க்கப்பட்டு அதனூடாக மலையக மக்கள் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே பெரும்பாலானோரின் எதிர்ப்பார்ப்பாகும்.

• • •

## இஸ்ரேலினால் ... தொடர்ச்சி ...

குற்றவியல் நீதி மன்றத்தில் 4 வழக்குகளை இது வரையில் பதிவு செய்துள்ளது. இந்த ஆண்டு பாகிஸ்தானில் 7 ஊடகவியலாளர்களும், பங்களதேசம் மற்றும் மெக்சிகோவில் தலா 5 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த ஆண்டு உலகில் 104 ஊடகவியலாளர்கள்கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களில் அரை பங்கு காசாவில் இடம் பெற்றுள்ளதாகவும் அனைத்துலக ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு *International Federation of Journalists (IFJ)* தெரிவித்துள்ளது.

இரண்டு அமைப்புக்களும் தகவல்கள் வெவ்வேறு வழிகளில் திரட்டுவதால் இந்த வேறுபாடுகள் காணப்படுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## பிரபலமடைந்து ... தொடர்ச்சி ...

தளங்களில் கூகுள் என்ற தளமே தற்போதும் 88 விகிதமான இடத்தைப் பிடித்து முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் ரஸ்யாவின் *Yandex* என்ற தளம் 3.1 விகிதமாகவும், சீனாவின் *Chinese Baidu* என்ற தளம் 2.7 விகிதமாகவும் *Microsoft Bing* என்ற தளம் 2.6 விகிதமாகவும் உள்ளன.

இந்த வருடம் ரெலிகிராம் சமூகவலைத் தளம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. வற்ஸ்ட்அப்முதலாவதுஇடத்தைப்பிடித்துள்ளது. வைபர் மற்றும் வீசற் ஆகிய தளங்கள் வீழ்ச்சி கண்டுள்ளன.

உக்ரைன் போருக்கு பின்னர் ரஸ்யா மீது மேற்குலக நாடுகள் கொண்டு வந்த தடை காரணமாக ரஸ்யாவில் அதன் உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் பிரபலமடைந்து வருகின்றன. கூகுள் தேடு தளத்திற்கு பதிலாக *Yandex* என்ற தளமும், யூரியுப் என்ற தளத்திற்கு பதிலாக *RuTube* என்ற தளமும், முக நூலுக்குப் பதிலாக *vk* என்ற தளமும் அங்கு பிரபலமடைந்து வருகின்றன.

## நிபந்தனையற்ற ... தொடர்ச்சி ...

பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட போது அதனை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் நிராகரித்திருந்தது. தற்போதைய தீர்மானத்தையும் தேவையற்றது மற்றும் தவறானது என ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் வூட் தெரிவித்திருந்தார். லெபனானில்போர்நிறுத்தம்கொண்டுவரப்பட்டு ஹமாஸ் அமைப்பு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காசாவில் போர் நிறுத்தம் கொண்டு வருவது அவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கை என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 14 மாதங்களாக காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் 45,000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களும் பெண்களுமாவார்கள்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



